பக்கங்கள்: 20
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2048 கார்த்திகை 02 சனிக்கிழமை 18.11.2017 கதிர் 13

## 10 இந்திய மீனவர்கள் நேற்றும் கைதாகினர்

யாழ்ப்பாணம், நவ. 18

அத்துமீறி மீன்பிடியில் ஈடு பட்டதாகத் தெரிவிக்கப்பட்டு தமிழ்நாடு நாகை மாவட்ட மீனவர்கள் 10 பேர் நேற்றுப் பருத்தித்துறைக் கடற்பரப்பில் வைத்துக் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

இலங்கைக் கடற்பரப்பில்

பக்கம் 18

# தேர்தல் பங்கீடுகள் குறித்து கூட்டமைப்பின் முடிவு 22 இல்

## தமிழரசு, புளொட், ரொலோ தலைவர்கள் கொழும்பில் கூடுவர்

யாழ்ப்பாணம், நவம்பர் 18

**உள்ளூராட்சித் தேர்தலுக்கான ஆசனப் பங்கீடு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் எதிர் வரும் 22 ஆம் திகதி கூடி இறுதி முடிவை எடுக்கவுள்ளன.**

**இதற்காகக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான தமிழரசுக் கட்சி, புளொட், ரெலோ ஆகியவற்றின் தலைவர்கள் பங்கேற்கும் கூட்டம் கொழும்பில் எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது.**

இதற்கு முன்னேற்பாடாகப் பங்காளிக் கட்சிகளான தமிழரசுக் கட்சிக்கும் ரெலோவுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்றுக் கொழும்பில் நடந்துள்ளது.

விரைவில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்வதில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் தற்போது ஆர்வம் காட்டியுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறித் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதற்கு

பக்கம் 18

## பொலிஸார் மீது வாள்வெட்டு: 14 சந்தேக நபர்களுக்கும் நிபந்தனைகளுடன் பிணை

யாழ்ப்பாணம், நவ 18

கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய உத்தியோகத்தர்கள் இருவரை வாளால் வெட்டிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த 14 சந்தேகநபர்களும் கடும் நிபந்தனைகளின் அடிப்படையில்

பக்கம் 18

## காணாமற்போனோர் தொடர்பில் சேகரிக்கப்பட்ட தகவல்கள் எங்கே?

### வடக்கு அமைச்சர் அனந்தி கேள்வி



யாழ்ப்பாணம், நவ. 18

ஜனாதிபதி ஆணைக்குழுவால் சேகரிக்கப்பட்ட காணாமற்போனோர் தொடர்பான தகவல்கள் எங்கே போய்விட்டன?

– இவ்வாறு கேள்வி எழுப்பினார் வடக்கு மாகாண

பக்கம் 18

## ஒற்றுக் கேட்கிறது நல்லாட்சி

### சாடுகின்றார் மஹிந்த ராஜபக்ஷ



கொழும்பு, நவ. 18

சகல அரச சேவை அதிகாரிகளினதும், நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் தொலைபேசி உரையாடல்களை அரசு ஒற்றுக் கேட்பது தெளிவாகியுள்

பக்கம் 18

## சிங்கக் கொடியை நிராகரித்த வடக்குக்கு எவ்வாறு அதிகாரப் பகிர்வு கொடுப்பது?

### சபையில் கேள்வியெழுப்பினார் அமைச்சர் சமரசிங்க



கொழும்பு, நவ. 18

இலங்கையின் தேசியக் கொடியை ஏற்றுவதற்கு வடக்கு மாகாண கல்வியமைச்சர் க. சர்வேஸ்வரன் மறுப்புத் தெரிவித்தமையைச் சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினரும், அமைச்சருமான மஹிந்த சமரசிங்க வன்மையாகக் கண்டித்துள்ளார்.

இப்படியான சம்பவங்கள் வடக்கில் பதிவாகும் தருணத்தில் எவ்வாறு மாகாணங்களுக்கு அதிகாரங்களை வழங்குவது என்ற கேள்வி எழுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வரவு–செலவுத்திட்டம் மீதான குழு நிலை விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் ஆரம்பமானது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் மஹிந்த சமரசிங்க, வடக்கு மாகாண

பக்கம் 18

## சிங்கக் கொடியை ஏற்ற மறுத்தார் வடக்கு மாகாண கல்வியமைச்சர்



வவுனியா, நவ 18

வவுனியா பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற நிகழ்வின்போது இலங்கையின் தேசியக் கொடியேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைக்க வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் மறுத்து விட்டார்.

வவுனியா ஈரப்பெரிய

பக்கம் 18

## சிறைக்காவலர் பிடியிலிருந்து கம்பி நீட்டினார் 'ஆவா' நிசா

### சில மணி நேரத்தில் மீண்டும் கைதானார் மல்லாகம் நீதிமன்றில் நேற்றுப் பரபரப்பு

யாழ்ப்பாணம், நவ 18

கோப்பாய் பொலிஸார் மீது வாள்வெட்டு நடத்தியமை தொடர்பான வழக்கின் சந்தேகநபரும் ஆவா குழுவின் முக்கிய நபருமான நிசா விக்டர் நேற்று மல்லாகம் நீதிமன்றில் சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் காவலிலிருந்து தப்பினார்.

எனினும் சில மணி நேரங்களில் அவர் மீண்டும் கைதுசெய்யப்பட்டார்.

மானிப்பாயில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பான வழக்கில் முற்படுத்துவதற்காக அவரைச் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் மல்லாகம் நீதிமன்றுக்கு நேற்று

பக்கம் 18

## வேட்பு மனுக் கோரல் அறிவிப்பு நவ. 27 இல்

கொழும்பு, நவ. 18

உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுக்களைத் தாக்கல் செய்வது தொடர்பான அறிவித்தல் எதிர்வரும் 27 ஆம் திகதி வெளியிடப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மஹிந்த தேஷப்பிரிய தெரிவித்தார்.

குறித்த தினத்தில் இருந்து 14 நாள்களுக்கு வேட்புமனுக்கள் கோரப்படும் எனவும் அவர்

பக்கம் 18

## பியர் விலையை அதிகரியுங்கள் யாழ்ப்பாணத்தில் போராட்டம்

### வடக்கு ஆளுநர் அலுவலகம் முன்பாக

யாழ்ப்பாணம், நவ. 18

மதுபானங்களில் ஒன்றான பியரின் விலை வரவு–செலவுத்திட்டத்தில் குறைக்கப்பட்டதைக் கண்டித்தும் அதை உடனடியாக அதிகரிக்குமாறு வலியுறுத்தியும் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று யாழ்ப்பாணத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.



பக்கம் 18

# நாட்டில் ஒழுக்கம் மேம்பட பௌத்த மதமே காரணம்

## ஜனாதிபதி பெருமிதம்



கொழும்பு, நவ. 18

உலகின் அபிவிருத்திய டைந்த பல நாடுகளிலும் காணக்கிடைக்காத ஒழுக்க விழுமியங்களுடன் கூடிய சமூகம் இலங்கையில் காணப்படுவதற்கு பௌத்த மதக் கோட்பாடுகளால் எமது சமூகம் போஷிக்கப்பட்டிருப் பதே காரணமாகும்.

புத்தசாசனத்தின் மேம் பாட்டிற்காக அரசு அர்ப்பணிப் புடன் செயற்படுகின்றது என ஜனாதிபதி மைத்திரி தெரிவித்துள்ளார்.

மாவனெல்ல, கெப்பட்டி பொல ஸ்ரீ அபயராஜ மகா விகாரையில் புதிதாக நிர் மாணிக்கப்படவுள்ள மூன்று மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் புண்ணிய நிகழ்வில் நேற்று முற்பகல் கலந்துகொண்டு உரையாற் றும்போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற் கண்டவாறு தெரிவித்துள் ளார்.





வரலாற்று முக்கியத்து வமுடைய மாவனெல்ல, கெப்பட்டிபொல ஸ்ரீ அபய ராஜ மகா விகாரைக்கு விஜ யம் செய்த ஜனாதிபதி, சமய அனுஷ்டானங்களில் ஈடு பட்டார். அதன் பின்னர் விகா ராதிபதி வண. மண்டா வல தம்மாராம நாயக்க தேரரை தரிசித்து நலம் விசா ரித்தார்.

மூன்று மாடிக் கட்டடத்துக் கான அடிக்கல் நடல் நிகழ்வின் பின்னர், இப் புண்ணிய நிகழ்வை நினைவு கூரும் முகமாக மரக் கன்று ஒன்றையும் ஜனாதிபதி நாட்டார்.

இந்த மூன்று மாடிக் கட் டடத்தின் நிர்மாணப் பணிக் கான நிதியுதவியாக பொல் கஹவலை பிரதேசத்தில் வசிக்கும் ஓய்வுபெற்ற ஆசி ரியையான திருமதி ஆர். பி.என். ரத்னாயக்கவால் 5 லட்சம் ரூபா நிதி ஜனாதிப தியிடம் கையளிக்கப்பட்டது.

அமைச்சர்களான கபீர் ஹாசிம், காமினி ஜயவிக்ரம பெரேரா, ரஞ்சித் சியம்பலாப் பிட்டிய, தயா கமகே மற்றும் முன்னாள் அமைச்சர் அதாவுத செனவிரத்ன உள்ளிட்ட பிரதேச மக்கள் பிரதிநிதி களும் பெருந்தொகை யான பிரதேச மக்களும் இந்தப் புண்ணிய நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(க)

## கேரளக் கஞ்சாவுடன் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர் கைது!



வவுனியா, நவ. 18

வவுனியா மத்திய பஸ் நிலை யத்துக்கு முன்பாக 6கிலோ 43 கிராம் கேரளா கஞ்சாவுடன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நப ரொருவர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா போதைப்பொருள் தடுப்புப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சப் இன்ஸ்பெக் டர் அசோக பிரசாந்த அவர்களின் தலைமையிலான பொலிஸ் சார் ஸன் குணசேன (56213), பொலிஸ் கொஸ்தாபல் களான கீர்த்தி (41672), கொத்தலாவல (66412), பண்டார (14957), பிரதீப் (45980), சாரங்க (60249), சமரதுங்க (52389) ஆகியோர் வவுனியா மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக சந்தேகத்துக் கிடமாக நின்ற சாவக்கச்சேரியைச் சேர்ந்த 37 வயதுடைய துரைராசா துசிபன் என்பவரின் பயணப்பொதி யைச் சோதனையிட்ட சமயத் தில் 6 கிலோ 43கிராம் கேர ளாக் கஞ்சா இருப்பது கண்டு பிடிக்கப்பட்டு அதனை கைப் பற்றியுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து புத்த ளம் நோக்கி கஞ்சாவைக் கடத்தி செல்ல முற்பட்டுள்ளதாவும் மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றத் தில் ஒப் படைக்கவுள்ளார் எனப் பொலி ஸார் தெரிவித்தனர். (க-100)

## தாய்லாந்தைச் சென்றடைந்தது ‘சயுரல’ கடற்படைக் கப்பல்



கொழும்பு, நவ. 18

தென்கிழக்கு ஆசிய நாடு களின் சர்வதேச கப்பற் படை மீளாய்வு (ASEAN-IFR 2017) மற்றும் அது தொடர்பான பயிற்சிகளில் கலந்துகொள்வதற்காக நாட்டை விட்டுப் புறப் பட்டுச்சென்ற இலங்கைக் கடற்படை கப்பல் சயுரல நேற்று முன் தினம் தாய் லாந்து பதாயா துறை முகத்துக்குச் சென்றடைந் தது.

தென்கிழக்கு ஆசிய நாடுகள் சங்கத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இன்று முதல் 21ஆம் திகதி வரை தாய்லாந்தின் பட்டயாவில் இந்தச் சர்வதேச கப்பற் படை மீளாய்வு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்த பயிற்சிகளில் 19 தென்கிழக்கு ஆசிய நாடுகளைப் பிரதிநிதித்து வப்படுத்தி 26 கடற்படை கப்பல்கள் கலந்துகொள் ளவுள்ளன.

இந்தச் சந்திப்பின் போது, நடைபெறவுள்ள சர்வதேச கப்பற்படை மீளாய்வு நிகழ்வு தொடர் பில் தாய்லாந்து கடற் படையின் லெப்டினென்ட் ஜே.ஜி. கியேட்பும் சபென் பொன்க் மற்றும் இலங்கை கடற்படையின் கொடி அதி காரி கடற்படை கொடி கட்டளை ரியர் அட்மிரல் கபில சமரவீர, சயுரல கப் பலின் கட்டளை அதிகாரி கப்டன் நிஷாந்த அம ரோசா, நிர்வாக அதிகாரி கொமாண்டர் எமிந்த கருணாசேன ஆகியோ ரி டையில் கலந்துரையாடப் பட்டது.

(க)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு படையினர் உதவி!



கொழும்பு, நவ. 18

யாழ்ப்பாண பிரதேசத்தில் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத் தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு யாழ் பாதுகாப்புப் படைப்பிரிவின் தலைமை அலுவலகத்தைச் சேர்ந்தவர்கள் சமைத்த உணவு, குடிதண்ணீர்ப் போத்தல்கள் உள் ளிட்டவற்றை வழங்கியுள்ளனர்.

திருநெல்வேலி செட்டியார் தோட்டம், பறவாக்குளம் ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வாழும் மக்களுக்குக் கடந்த 11 ஆம் திகதி இந்த உதவிகள் வழங் கப்பட்டுள்ளன.

பலாலி இராணுவ வைத்தியசா லையின் மூலம் செட்டிகுள பிர தேசத்தில் மக்களுக்கு வைத்திய சுகாதார வசதிகளும் வழங்கப்பட் டுள்ளன.

# ராணுவம் நிலைகொள்வதற்கு வாள்வெட்டுகள் வழிவகுக்கும்

## வடக்கு அமைச்சர் அனந்தி எச்சரிக்கை

யாழ்ப்பாணம், நவ 18

இராணுவமும் சிறப்பு அதிரடிப் படையும் வடக்கிலிருந்து வெளியேற்றவேண்டும் என மாகாண சபை வலியுறுத்தி வருகின்றது. எனினும் இளைஞர்களின் வாள்வெட்டுக்கள் உள்ளிட்ட வன்முறைகள் இருக்குமாயின் இராணுவம் எமது மண்ணில் நிலைகொள்ளும் நிலை ஏற்பட்டுவிடும்.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண மகளிர் விவகார மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ்ப்பாண இளைஞர்கள் வாள்வெட்டு உள்ளிட்ட வன்முறைகளின் பிரியர்கள் என வெளியில் பேசப்படுகின்றது. ஒரு சிலரால் முன்னெடுக்கப்படும் இந்த வன்முறைகளின் பின்னணியில் பொலிஸார் மௌனமாக உள்ளனர்.



விடுதலைப் புலிகளைப் பிரித்த தெற்குத் தலைவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைப்பதிலும் வெற்றி கண்டுள்ளனர்.

இந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் முஸ்லிம் மக்களின் மீள்குடியமர்வுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒரு குடும்பத்துக்கு 25 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய அரசால் ஏன் முடியவில்லை?

முஸ்லிம் மக்களுக்கு நல்ல தலைவர்கள் அமைந்துள்ளனர். அது முஸ்லிம் மக்களுக்குக் கிடைத்த கொடை - என்றார்.

# நல்லூர் சங்கிலியன் பூங்காவில் இன்று மர நடுகையும் மலர்க் கண்காட்சியும்

## பிரதம விருந்தினராக முதலமைச்சர் விக்கி

யாழ்ப்பாணம், நவ.18

“ஆளுக்கொரு மரம் நடுவோம் நாளுக்கொரு வரம் பெறுவோம்” என்ற தொனிப் பொருளுக்கு அமைவாக வடமாகாண மரம் நடுகை மாதத்தை முன்னிட்டு மர நடுகையும் மலர் கண்காட்சியும் நடைபெறவுள்ளன.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் வடக்கு மாகாண சபை உறுப்பினருமான பொ.ஐங்கரநேசன் தலைமையில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் சங்கிலியன் பூங்காவில் இந்த நிகழ்வு இடம்பெறும்.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ. விக்னேஸ்வரன் கலந்து சிறப்பிப்பார்.

வடமாகாண மரநடுகை மாதத்தில் (கார்த்திகை 1 -30, 2017) தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் இந்த சிறப்பு நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது. (இ)

# சர்வதேசப் போட்டிக்கு கிளிநொச்சி மாணவன்



சர்வதேச ரீதியிலான கணித ஒலிம்பியாட் போட்டிக்காக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்தில் இருந்து கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவன் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இலங்கையில் இருந்து ஒலிம்பியாட் போட்டிக்காகத் தெரிவாகியுள்ள 6 மாணவர்களில் ஒரேயொரு தமிழ் மாணவனாகத் தெய்வேந்திரம் திருக்குமார் இடம்பிடித்துள்ளார்.

இதேவேளை சர்வதேச அளவிலான இந்தப் போட்டி எதிர்வரும் 20 ஆம் திகதி சிங்கப்பூரில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இனவாத அடிப்படையிலேயே உள்ளூராட்சி எல்லை நிர்ணயம்

## பெங்கமுவே நாலக்க தேரர் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ 18

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை முன்னிட்டு அரசால் முன்னெடுக்கப்பட்ட எல்லை நிர்ணயப் பணிகள் இனவாதத்தை முன்னிலைப்படுத்தியே முன்னெடுக்கப்பட்டன எனத் தேசிய உரிமைகள் அமைப்பின் தலைவர் பெங்கமுவே நாலக்க தேரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

எல்லை நிர்ணயப் பணிகள் நிறைவுபெற்றுத் தேர்தலுக்கான வர்த்தமானி அறிவிப்பு வெளியாகியிருக்கும் நிலையிலேயே பெங்கமுவே நாலக்க தேரர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

தேசிய உரிமைகள் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இவ்வளவு காலமும் சிவனொளி பாதமலைப் பகுதி அம்பகமுவ பிரதேச சபையின் அதிகார எல்லைக்கு உட்பட்டிருந்தது. ஆனால் தற்போது மஸ்கெலியா மற்றும் நோர்வூட் ஆகிய பிரதேச சபைகளுக்கு மிகவும் இனவாத ரீதியாக ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் குறித்து உள்ளூராட்சிகள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சரிடம் வினவியிருந்தோம். இது தமது தீர்மானம் இல்லை என்றும், 2015ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலில் வழங்கப்பட்ட வாக்குறுதியாக அமைந்திருப்பதாகவும் பதிலளித்தார்.

எனினும் இதனூடாக குறுகிய அரசியல் நோக்கத்திலேயே சிலர் செயற்படுகின்றனர் என்பது தெளிவாகின்றது. எவ்வாறாயினும் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற இந்த இடங்களில் இப்படிப்பட்ட செயற்பாடானது இனவாதத்தை உரமிட்டு விரிவாக்கின்ற செயற்பாடாகவே நாங்கள் காண்கின்றோம் - என்றார்.

# பழைமையான சட்டங்களே மோசடிகளுக்குக் காரணம்

## அமைச்சர் வஜிர கூறுகிறார்

கொழும்பு, நவ 18

நிதித் துறையில் பாரியளவு மோசடி இடம்பெறக் காரணம் அத்துறையில் காணப்படும் பழைமையான சட்டங்களே என வெளிவிவகார அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியில் இடம்பெற்ற முறி மோசடியும் சட்டத்துறையில் காணப்பட்ட ஓட்டைகளே காரணம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.



இலங்கை நிர்வாக அபிவிருத்தி நிறுவனத்தில் நேற்று நடைபெற்ற மாவட்ட செயலாளர்களுக்கான செயலமர்வின் இரண்டாவது நாள் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மத்திய வங்கி விடயத்தில் காணப்படும் 40 வருட பழைமை வாய்ந்த சட்டங்கள் உடன் மறுசீரமைக்கப்பட வேண்டும். கடந்த 20 வருடங்களாக நாட்டிலுள்ள பிரமிட் வகை சட்டவிரோத வியாபாரப் பிரிவு மத்திய வங்கியினால் சட்டவிரோத நடவடிக்கை என சுட்டிக்காட்டப்பட்டபோதிலும் இதில் ஈடுபடும் ஒருவரைக் கூட கைது செய்து வழக்குத் தாக்கல் செய்ய முடியவில்லை - என்றார்.

# திருட முற்பட்ட நபரை நையப்புடைத்த மக்கள்

முல்லைத்தீவு, நவ 18

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு நகரப்பகுதி வர்த்தக நிலையம் ஒன்றை உடைத்து திருட முற்பட்ட நபர் ஒருவர் பொதுமக்களால் நையப்புடைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகத்திற்கு இடமான வகையில் நேற்று இரவு குறித்த நபர் நடமாடியதை அவதானித்த பொதுமக்கள் அவரைப் பின் தொடர்ந்துள்ளனர்.

இந்நிலையில் வர்த்தக நிலையம் ஒன்றின் பின்வழியாகச் சென்ற குறித்த நபர், வர்த்தக நிலையக் கதவை உடைத்துத் திருட முற்பட்டவேளை பொதுமக்களால் கையும், மெய்யுமாக பிடிக்கப்பட்டார்.

இதனையடுத்து, குறித்த நபரை நையப்புடைத்த பொது மக்கள், அப்பகுதிச் சமூக சேவையாளர் ஒருவரிடம் கையளித்துள்ளனர்.

# முஸ்லிம் வீடுகள் மீது தாக்குதல் கிந்தொட்ட பகுதியில் பதற்றம்

கொழும்பு, நவ.18

கிந்தொட்ட, ஹப்புகொட பகுதியில் இடம்பெற்ற விபத்துச் சம்பவம் ஒன்றை அடுத்து அப்பகுதியில் உள்ள முஸ்லிம்களின் வீடுகள் மற்றும் பள்ளிவாசல்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதால் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து அந்தப் பகுதியில் கலகம் அடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் முஸ்லிம் பெண் ஒருவர் மீது மோட்டார் சைக்கிளில் வந்த பெரும்பான்மை இனத்தவர் ஒருவர் மோதியதில் அந்தப் பெண் காயங்களுக்குள்ளாகினார். இதனையடுத்து, அந்தப் பிரதேசத்திலுள்ளவர்கள் குறித்த மோட்டார் சைக்கிளில் வந்தவர் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இந்தச் சம்பவமே கடந்த சில தினங்களாகச் சிறு சிறு சச்சரவுகளாக இருந்து வந்து, நேற்று மோதலாக மாறியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று நண்பகல் முதல் விசேட அதிரடிப் படைப் பாதுகாப்பு அந்தப் பிரதேசத்துக்கு வழங்கப்பட்டிருந்ததாகவும், பின்னர் அவர்களின் பாதுகாப்பு குறைக்கப்பட்டிருந்ததாகவும், இதனையடுத்து முஸ்லிம்களின் வீடுகள் மற்றும் சொத்துக்கள் தாக்குதலுக்குள்ளாகியதால் தற்போது விசேட பொலிஸ் குழு களத்தில் இறக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

# ராஜரட்டைப் பல்கலைக்கு அருகிலிருந்து சடலம் மீட்பு

கொழும்பு, நவ 18



ராஜரட்டை பல்கலைக்கழகத்தின் புளியங்குளம் விவசாய பீடத்துக்கு முன்னால் உள்ள கடையொன்றுக்குள் இருந்து சடலம் ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளதாக அனுராதபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கடைக்குள் இருந்து துர்நாற்றம் வீசியதால், பிரதேச மக்கள் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். இதனையடுத்துப் பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அனுராதபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## உயர் நீதிமன்றத்தின் சுயாதீனம்

தமிழ்ப் பத்திரிகை ஆசிரியர்களை நேற்றுமுன்தினம் மாலையில் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், 1988 முதல் 18 ஆண்டுகள் தொடர்ந்து இணைக்கப்பட்டிருந்த வடக்கையும், கிழக்கையும் பிரித்து இலங்கை உயர்நீதிமன்றம் வழங்கிய உத்தரவை 'கபடத்தனமான தீர்ப்பு' என்ற வார்த்தைகளினால் குறிப்பிட்டிருந்தார்.

90 களின் பின்னால் இலங்கையின் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகள், முடிவுகள், உத்தரவுகள் குறித்த மோசமான விமர்சனங்கள் உள்ளன.

சுயாதீனமாகவும், நடுநிலையாகவும், பக்கச்சார்பின்றியும் தீர்ப்பு வழங்க முற்பட்டமையால், பிரதம நீதியரசர் பதவியிலிருந்தவரே பலவந்தமாகத் தமது பதவியிலிருந்து துரத்தியடிக்கப்படும் நிலைமைக்கு இலங்கையின் நீதித்துறையில் 'நீதி' செத்துக் கிடந்தது.

இப்போது அதில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதையும் நீதியான போக்குக் கட்டவிழ்கின்றமையையும் சுயாதீன வட்டாரங்கள் அவதானத்துடன் கவனித்துள்ளன. உயர் நீதிமன்றத்தின் அண்மைக் காலத் தீர்ப்புகள் அதன் சுயாதீனத் தன்மையைப் பிரதிபலிக்கின்றன என சுயாதீன வட்டாரங்கள் மெச்சுகின்றன.

ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி, உள்ளக சுயநிர்ணய உரிமை போன்றவற்றைக் கோரும் உரித்து தமிழர்களுக்கு உண்டு என்ற சாரப்பட அண்மையில் வழங்கிய தீர்ப்பு, அரசமைப்பின் 6 ஆவது திருத்தம் மூலம்கொண்டுவரப்பட்ட - பிரிவினை தொடர்பான - மிக மோசமான சட்ட ஏற்பாடுகளுக்குச் சரியான தடுப்பு என சிலாகிக்கப்படுகின்றது.

அரசமைப்பின் இருபதாவது திருத்தம் தொடர்பான தனது தீர்ப்பில், மாகாணசபைகள் தேர்தலின் வாக்களிப்பும் மக்களின் இறைமையின் வெளிப்பாடே என்ற சாரப்பட முடிவை அறிவித்தமை மூலம் மாகாணங்களுக்கும் - மாகாண சபைகளுக்கும் - பகிரப்பட்ட இறைமை உண்டு என்பதை உயர்நீதிமன்றம் அங்கீகரித்தது. இதன் மூலம் இலங்கையில் அதிகாரப் பகிர்வு விடயத்தில் புதிய பாதை ஒன்று சட்ட ரீதியாகத் திறந்து விடப்பட்டிருக்கின்றது என்று சட்ட ஆய்வாளர்கள் கருத்து வெளியிடுகின்றனர்.

பதவியில் இருந்த பிரதம நீதியரசரை, சட்ட விரோதமாகக் கலைத்து விட்டு, சட்டமுறையற்ற முறையில் பிரதம நீதியரசர் ஒருவரைப் பதவியில் அமர்த்திய ஒரு நாட்டிலேயே, ஆட்சி மாற்றத்தை அடுத்து இந்த மாற்றங்கள் வந்திருக்கின்றன.

ஒருபால் உறவு தொடர்பான உரிமைகள் விடயத்தில் சர்வதேச கருத்தியல் நிலைப்பாட்டு மாற்றத்தையும் கவனத்தில் எடுத்துள்ள உயர் நீதிமன்றம், அத்தகைய வழக்கு ஒன்றில் கீழ்நிலை நீதிமன்றம் வழங்கிய குற்றத் தீர்ப்பை இலங்கையின் சட்ட ஏற்பாடுகள் கருதி - வேறு வழியில்லாததால் - ஏற்றுக் கொள்வதாக அறிவித்தது. ஆனால், குற்றம் சுமத்தப்பட்டவர்களின் தனிப்பட்ட விருப்பம் மற்றும் உரிமைகளைக் கவனத்தில் எடுத்து, அவர்களுக்குப் பொறுப்பற்ற தண்டனை வழங்குவதற்கு உயர்நீதிமன்றம் மறுத்து விட்டது.

இரட்டைப் பிரஜாவுரிமையுடன் எம்.பியாகியமை தவறு என்ற - கீதா குமாரசிங்கவுக்கு எதிரான - மேல்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பை ஏற்று அங்கீகரித்ததன் மூலம் உயர்நீதிமன்றம் தனது சுயாதீனத் தன்மையை - பக்கச்சார்பின்மையை - மீண்டும் ஒரு தடவை நிரூபித்திருப்பதாக கொழும்பு புதுக்கடை சட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பௌத்தத்துக்கு மேலான இடம் என்று துள்ளிக் குதிக்கும் நாட்டில், புத்தரின் முகத்தைத் தனது தோள்பட்டையில் குத்தியிருந்தமைக்காக விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டு, தடுத்துவைக்கப்பட்டு, அவமானப்படுத்தப்பட்டு, நாட்டை விட்டுத் திருப்பி அனுப்பப்பட்டவெளிநாட்டுப் பெண்மணிக்கு நஷ்டஈடு செலுத்துமாறு உத்தரவிட்டமை மூலம், ஆட்சிப் பீடத்தின் பௌத்த மதவாதப் போக்குக்கு ஒரு குட்டு வைத்திருக்கின்றது உயர்நீதிமன்றம். வெளிநாட்டுப் பெண்மணியின் தனிப்பட்ட சுதந்திரத்தை - உரிமையை - அங்கீகரித்ததன் மூலம் தனது சுயாதீனத்தைப் பறைசாற்றியிருக்கின்றது உயர்நீதிமன்றம்.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் மூத்த அதிகாரிகள் மற்றும் உயர் நீதிமன்றத்தின் தற்போதைய இரண்டு நீதியரசர்கள் உட்பட பல சட்டத்துறையினருக்கு எதிராக இலங்கையின் மத்திய வங்கியின் சிரேஷ்ட முகாமையாளர் ஒருவர் தாக்கல் செய்துள்ள - சித்திரவதைகள், மனிதாபிமானமற்ற, அவமானப்படுத்தும் நடவடிக்கை தொடர்பிலான - அடிப்படை உரிமை மீறல் மனு சம்பந்தமாக உயர்நீதிமன்ற நீதியரசர்கள் தெரிவித்த கருத்துகளும் அவதானத்துக்கு உரியவை.

"இந்த வழக்கில் எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டவர்களில் பலர் எங்களின் நண்பர்கள். சட்டமா அதிபர் திணைக்களத்திலும் பிற மையங்களிலும் எங்களுடன் இணைந்து பணியாற்றியவர்கள். இருவர் எங்களின் சக நீதியரசர்கள். எனவே, இவர்கள் சம்பந்தப்பட்ட மனுவை நாங்கள் விசாரணை செய்கின்றமை பொருத்தமற்றது. ஆகையால், அந்தப் பொறுப்பிலிருந்து விலகி நிற்க விரும்புகிறோம்." - என்று அந்த நீதியரசர்களில் சிலர் குறிப்பிட்டிருக்கின்றனர். இந்தக் கருத்து அவர்கள் நீதிமன்றத்தின் சுயாதீனத்தை - பக்கச்சார்பின்மையை - பேணுவதில் அதீத கவனம் கொண்டுள்ளனர் என்பதையே காட்டுகின்றது.

உயர் நீதிமன்றத்தின் இந்தத் தனித்துவப் போக்கு நல்லதோர் சமிஞ்ஞை.

இத்தகைய பக்கச்சார்பின்மை - சுயாதீனப் போக்கு - தொடருமாயின் இலங்கையின் நீதித்துறை மீது மக்கள் - குறிப்பாக இதுவரை இலங்கை நீதித்துறையால் தாம் பாதிக்கப்பட்டு வருகின்றோம் என்று கருதும் சிறுபான்மையினரான தமிழ் மக்கள் - நீதித்துறை மீது முழுமையான நம்பிக்கை வைக்கக்கூடிய நல்ல சூழல் வரும் என்று கருதலாம்.

# பிரதேச ஊடகவியலாளர்களுக்கு சிறப்பு அடையாள அட்டைகள்

அச்சு, இலத்திரனியல் மற்றும் இணையத்தள நிறுவனங்களின் ஊடாக நியமிக்கப்பட்டு, நாடளாவிய ரீதியில் செய்திகள் சேகரிக்கும் சகல பிரதேச ஊடகவியலாளர்களுக்கும் தற்போது 2018 ஆம் ஆண்டுக்கான சிறப்பு ஊடக அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன என அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஊடக மற்றும் நிதி அமைச்சர் மங்கள சமரவீரவின் கருத்திட்டத்துக்கு அமைவாக முன்னெடுக்கப்பட்டுள்ள இந்தச் சிறப்புநடவடிக்கை, அனைத்து பிரதேச ஊடகவியலாளர்களையும் கௌரவப்படுத்தும் நோக்கில்மேற்கொள்ளப்பட்டு வருகிறது என, தகவல்திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் சுதர்சன குணவர்தன தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் அச்சக, இலத்திரனியல், இணையத்தள ஊடக நிறுவனங்களில் கடமை புரியும் அலுவலக ஊடகவியலாளர்களுக்கு 'ஊடகவியலாளர்' என்றும், பிரதேச ரீதியாக செய்திகளைச் சேகரிக்கும் ஊடகவியலாளர்களுக்கு 'பிரதேச ஊடகவியலாளர்' என்றும் மாத்திரமே தகவல் திணைக்களத்தினால் ஊடக அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வந்தன.

ஆனால், பிரதேச ஊடகவியலாளர்களுக்கு மதிப்பளித்து, அவர்களையும் கௌரவப்படுத்தும் நோக்கில் எவ்வித வேறுபாடுகளுமின்றி இச்சிறப்பு ஊடக அடையாள அட்டைகள் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதேச ஊடகவியலாளர்களுக்கு 2018 ஆம் ஆண்டுக்கான சிறப்பு அடையாள அட்டைகள் விநியோகிக்கும் நடவடிக்கைகள், தற்போது திணைக்களத்தால் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றமையால், பிரதேச ஊடகவியலாளர்கள் தாம் சேவையாற்றும் அச்சு, இலத்திரனியல்அல்லது இணையத் தளம் ஆகியவற்றின் ஏதாவது ஓர் ஊடக நிறுவனத்தின் ஆசிரியர் ஊடாக அத்தாட்சிப்படுத் தப்பட்டு நிரூபிக்கப்பட்ட விண்ணப்பம் ஒன்றைத் தகவல் திணைக்களத்திற்குச் சமர்ப்பிப்பதன் மூலம் சிறப்பு ஊடக அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒருவர் எத்தனை ஊடக நிறுவனங்களின் கீழ் செய்தி கள் சேகரித்தாலும், ஒருவ ருக்கு ஏதாவதோர் ஊடக நிறுவனத்தின் ஊடாக மாத்திரமே விண்ணப்பிக்க முடி யும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் புதிய அமைப்பாளர்கள் நியமனம்

கொழும்பு, நவ. 18

புதிதாக நியமிக்கப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர்கள் மூவர்ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமிருந்து தமது நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொண்டனர்.



ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த நிகழ்வில் எம்.எச். மன்சில் கொழும்பு கிழக்கிற்கான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதான அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் கொலன்னாவை நகர சபைத் தலைவர் ரவீந்திர உதயஷாந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். முன்னாள் மொறட்டுவை நகர மேயர் டீ. எம். சுஜித் புஷ்பகுமார ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சியின் கொழும்பு மாவட்ட இணை அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ரத்கம தொகுதியின் இணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட கீத் குணசேகரவும் அண்மையில் தனது நியமனக் கடிதத்தை ஜனாதிபதி செயலகத்தில், ஜனாதிபதியிடமிருந்து பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# மட்டுப்படுத்தப்பட்ட வீதிப் போக்குவரத்து கொழும்பு கொட்டாஞ்சேனைப் பகுதியில்



கொட்டாஞ்சேனை பகுதியில் உள்ள மூன்று வீதிகள் நேற்று இரவு 9 மணி முதல் எதிர்வரும் 20ஆம் திகதி அதிகாலை 5 மணிவரை மூடப்பட்டு இருக்கும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பகுதியில் புதிதாக நீர்க்குழாய்களை பொருத்தும் நடவடிக்கை காரணமாக கொட்டாஞ்சேனையில் அளுத்மாவத்தை ஹெட்டியாவத்த சந்தியில் இருந்து இப்பாவத்தை சந்திவரையும் இராமநாத மாவத்தையும் மூடப்பட்டு இருக்கும்.

கொட்டாஞ்சேனைபொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொட்டாஞ்சேனை வீதியில் 200 மீற்றர் வரையிலானவீதி மூடப்பட்டு இருக்கும். மட்டக்குளி பாம் வீதியில் 130மீற்றர் வரையிலான வீதியும் மூடப்படவுள்ளது.

இதன் காரணமாக மாற்று வீதியை பயன்படுத்துமாறு சாரதிகளிடம் கோரப்பட்டுள்ளது என பொலிஸ் தலைமையகம் இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாளை

19.11.2017
ஞாயிற்றுக்கிழமை

நட்சத்திரம் : அனுஷம் மு.இ. 10.16 வரை
திதி : பிரதமை மு.இ.6.56 வரை

சுபநேரம் : 9.09 – 10.39 வரை
இராகுகாலம்: 4.39 – 06.09 வரை

### கிராம, மாவட்ட, மாகாண சபைகளில் சிறப்பாகச் செயற்படும்

# பெண்களை முதன்மைப்படுத்தவே 25 வீத இட ஒதுக்கீடு; தலைவர்களின் மனைவியரை ஆட்சிக்கு அமர்த்த அல்ல

கொழும்பு, நவ. 18
நாட்டில் 25 வீத பெண் அரசியல் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டமை, எமது நாட்டில் கிராம, மாவட்ட, மாகாண சபைகளில் சிறந்து செயற்படும் பெண்களை முதன்மைப்படுத்தவேயாகும்.

அதை விடுத்து, ஆட்சியில் உள்ள தலைவர்களின் மனைவிமாரை ஆட்சி கதிரையில் அமர வைக்க அல்ல என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் திருத்தச் சட்டத்தின் ஊடாக பெண் பிரதிநிதித்துவம் 25 வீதம் உறுதி செய்யப்பட்டுள்ளமை தொடர்பான நிகழ்ச்சி பண்டாரநாயக்க ஞாப கார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதியின் தேர்தல் வாக்குறுதியை நாடாளுமன்றத் தேர்தலில் அவர் நிறைவேற்றினார்.

அதனை எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் நிறைவேற்றுவார்.



பல்கலைக்கழகங்கள் பல இணைந்து நடத்திய ஆய்வுகளின் முடிவுகளில் மாகாண மற்றும் கிராம மட்டங்களில் நிர்வாகச் செயற்பாடுகளில் பெண்களின் பங்களிப்பே அளப்பரியதாகவுள்ளது.

முதல் பெண் பிரதமர் ஆட்சி செய்த நாட்டில், பெண்கள் தைரியத்துடன் முன்வந்து ஆட்சிக்கதிரையில் அமர இன்று மிகவும் அச்சத்துடன் இருக்கின்றனர்.

காரணம், சில விசமிகளின் பாலியல் தொல்லைகள் மற்றும் மிரட்டல்களாகும். இதனை முறியடிக்கத்தான் இன்று ஜனாதிபதி 25 வீத பெண் பிரதிநிதித்துவத்தைக் கட்டாயமாக்கியுள்ளார்.

பெண்களுக்கு அதிகாரம் தேசத்திற்கு மாற்றம், என்ற கருப்பொருளில் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் செயற்படும் நாங்கள் மேலும் குடும்பத்திற்கு ஒருவர் என்ற கருப்பொருளிலும் அரசியல் பங்களிப்பை மேம்படுத்த எதிர்பார்க்கின்றோம். இது எவ்வகையில் சாத்தியம் என்று தெரியவில்லை.

பெண்களே பெண்களுக்கு வாக்களிக்காமல் அவர்களை புறந்தள்ளுவதை நிறுத்தி எதிர்காலத்தில் பெண்களில் அரசியல் அதிகாரத்தை ஸ்திரப்படுத்துவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## வாகன இறக்குமதிக்கான வரியில் மேலும் தளர்வு!

கொழும்பு, நவ. 18
வாகன இறக்குமதி தொடர்பில் வரவு - செலவுத்திட்டத்தின் ஊடாக அறிவிக்கப்பட்ட கொள்கைகள் மேன்மேலும் தளர்த்தப்படும் என்று நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் நவம்பர் ஒன்பதாம் திகதிக்கு முன்னர் திறக்கப்பட்ட கடன் பத்திரங்கள் மூலம் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களை வரவு -செலவுத் திட்டத்துக்கு முன்னர் இருந்த இறக்குமதித் தீர்வையின் பிரகாரம் விடுவித்துக் கொள்ள அனுமதி வழங்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இத்தகைய வாகனங்களை அடுத்த வருடம் ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு முன்னர் சுங்கத்திலிருந்து விடுவித்துக் கொள்வது அவசியம் என்று நிதி அமைச்சர் அறிவித்துள்ளார்.

இதற்கு அப்பால் மின்வலுவில் இயங்கும் வாகனங்களுக்கு வரவு- செலவுத்திட்டத்தில் இறக்குமதி தீரவை சலுகை வழங்கப்பட்டது.



இந்த சலுகையை ஒரு வருட காலத்திற்கு மேற்படாமல் பயன்படுத்தப்பட்ட வாகனங் களுக்கும் வழங்குவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நிதியமைச்சர் விடுத்த வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் பழைய மின்வலு மோட்டார் கார் இறக்குமதி மீது பத்து லட்சம் ரூபா இறக்குமதி தீர்வை வழங்கப்படும்.

ஹைபிரிட் வாகனங்களுக்கான லீசிங் வசதிகள் 50 சதவீதமாக இருக்க வேண்டும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. இது 70 இற்கு 30 சதவீதமாக இருந்தால் போதுமானது என்றும் நிதி அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## மத்தள விமான நிலையத்துக்குள் நுழைந்த யானைகள் அட்டகாசம்

கொழும்பு, நவ. 18
மத்தள சர்வதேச விமான நிலையத்தின் பாதுகாப்பு வேலிகளை உடைத்துக் கொண்டு யானைகள் உள்நுழைந்து அட்டகாசம் புரிந்த சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

காட்டு யானைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் விமான நிலையத்தைச் சுற்றி பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டிருந்த நிலையில், அவற்றை உடைத்துக் கொண்டு யானைகள் உள் நுழைந்துள்ளன என விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆசியாவின் ஆச்சரியமாக ஸ்ரீலங்காவை மாற்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் திட்டத்திற்கு அமைய, மத்தள விமான நிலையம் நிர்மாணிக்கப்பட்டது.

இந்த விமான நிலைய நிர்மாணப் பணிகளுக்காக சீன அரசு பல பில்லியன் ரூபாய்கள் உதவியில், காட்டு விலங்கினங்கள் வாழும் பகுதியை அபிவிருத்தி என்ற நோக்கில் அழித்து சர்வதேச விமான நிலையம் அமைக்கப்பட்டது.

இந்நிலையில், விமான நிலையம் திட்டமிட்ட வகையில், பிரசித்தி பெறாத நிலையில் பெரும் நட்டத்திற்கு முகம் கொடுத்துள்ளது.




இவ்வாறான சூழ்நிலையில், காட்டு விலங்கினங்கள் தங்கள் இருப்பிடம் தேடி விமான நிலையத்திற்குள் புகுகின்றமையால் அங்கு மேற்கொள்ளப்படும் விமான சேவை நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், யானைகளைத் தூரமான பகுதிக்கு விரட்டும் நடவடிக்கைகளில் அம்பாந்தோட்டை வன விலங்கு அலுவலக அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

## நன்மைகளைத் தரக்கூடிய குணாதிசயங்கள் வரவு — செலவுத் திட்டத்தில்!

கொழும்பு, நவ. 18
நீண்டகால நன்மைகளைத் தரக்கூடிய குணாதிசயங்கள் வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளன என விசேட பணிப் பொறுப்புக்கள் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

குறிப்பாக வேலைவாய்ப்புக்களை உருவாக்கி, தேசிய மட்டத்தில் முதலீடுகளை ஊக்குவிக்கும் அம்சங்கள் வரவு - செலவுத் திட்டத்தில் இடம்பெற்றுள்ளன.

இதன் மூலம் உள்நாட்டு வளங்களை ஆக்கக்கூடுதலான வகையில் பயன்படுத்தும் வாய்ப்பு கிடைக்கின்றது.

கடந்த 2014 ஆம் ஆண்டில் அரசு வரி அறவீட்டின் மூலம் 19 ஆயிரத்து 800 கோடி ரூபா வருமானத்தை ஈட்டியது.

இந்த வருமானத்தை 2018 ஆம் ஆண்டளவில் 37 ஆயிரத்து 500 கோடி ரூபாவாக அதிகரிப்பது அரசின் இலக்காகும்.

மேலும், திருகோணமலையிலுள்ள எரிபொருள் தாங்கி கட்டடத்தொகுதியை உரிய முறையில் பயன்படுத்தினால் முழு ஆசியாவிற்கும் தேவையான எரிபொருளை இலங்கையில் களஞ்சியப்படுத்த முடியும்; விநியோகிக்க முடியும்.



சரத் அமுனுகம கருத்து

இவ்வாறான பெரிய களஞ்சிய கட்டடத் தொகுதியை வெறுமனே வைத்திருப்பதால் நாட்டுக்குப் பெரிய நட்டமாகும்.

சமீபத்தில் எரிபொருள் தட்டுப்பாடு தொடர்பாகக் கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழுவின் அறிக்கைக்கு அமைவாக எரிபொருள் பற்றாக்குறைக்கு முக்கிய காரணம் போதுமான எரிபொருள் களஞ்சியப்படுத்தப்படாமையே ஆகும் .

யுத்த காலப்பகுதியில் பிரிட்டிஷ் கப்பலுக்கு எரிபொருள் தாங்கிகள் மூலம் விநியோகத்தை மேற்கொண்ட உரிமை இலங்கை அரசுக்கே உண்டு என்பதால் இவ்வாறானவற்றைப் பயன்படுத்தி கூடுதலான வருமானத்தை அரசால் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பயங்கரவாதத் தடைச் சட்டம் முற்றாக ஒழிக்கப்படவேண்டும்!

## கிழக்கு மாகாண முன்னாள் விவசாயத்துறை அமைச்சர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, நவ. 18

இராணுவத்தால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட தமிழ் மக்களின் காணிகள் விரைவில் விடுவிக்கப்பட வேண்டும். இதற்கு ஏதுவாக பயங்கரவாதத் தடைச்சட்டம் இல்லாதொழிக்கப்பட வேண்டும் என கிழக்கு மாகாண முன்னாள் விவசாயத்துறை அமைச்சர் கிருஷ்ணபிள்ளை துரைராசசிங்கம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அமெரிக்கத் தூதரகத்தின் பிரதித் தலைமை அதிகாரி றொபர்ட் பி.கில்டன் மற்றும் கிழக்கு மாகாணத்தின் முன்னாள் விவசாய அமைச்சர் துரைராசசிங்கத்துக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மட்டக்களப்பு நல்லையா வீதியிலுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற இந்த கலந்துரையாடல் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக் கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மிகவும் முக்கியம் வாய்ந்ததாக இக்கலந்துரையாடல் இடம்பெற்றது. தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து பல்வேறு விடயங்கள் தொடர்பில் இருவரும் கலந்துரையாடினோம்.

குறிப்பாக இலங்கை சுதந்திரம் பெற்ற நாள் தொடக்கம் தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளைப் படிப்படியாக இழந்து கொண்டே வந்திருக்கின்றார்கள்.

பல்வேறு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன, பல்வேறு வாக்குறுதிகளும் வழங்கப்பட்டன ஆனால், அவைகள் இடைநடுவில் கைவிடப்பட்டவையாகவே அமைந்தன.

இதன் காரணமாக பெரியதொரு போர், பெரிய அழிவுகள் நடைபெற்று தற்போது புதிய அரசு ஒன்று பதவியேற்றுள்ளது. தற்போதைய நாடாளுமன்றம் அரசியல் நிர்ணய சபையாக மாற்றப்பட்டுள்ளது.

எமது கட்சியால் சமஷ்டி அடிப்படையிலான முன்மொழிவு கூறப்பட்டுள்ளது. மாகாணங்கள் அல்லது பிராந்தியங்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் . வழங்கப்படுகின்ற அந்த அதிகாரங்கள் நினைத்த மாத்திரத்தில் மீளப்பெற முடியாத பொறிமுறையில் அமைய வேண்டும்.

பாரம்பரிய வாழிடங்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும், போன்ற விடயங்களோடு காணி அதிகாரம் மற்றும் சட்டம் ஒழுங்குடன் தொடர்புடைய பொலிஸ் அதிகாரம் என்பனவும் வழங்கப்படும் வகையில் அந்த அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்கின்ற செயற்பாட்டில் எமது கட்சி நடவடிக்கை எடுத்து வருகின்றது.

வரவு- செலவுத் திட்டத்துக்கு முன்னர் இடைக்கால அறிக்கை தொடர்பான விடயங்கள் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டன. வரவு செலவுத் திட்ட விடயம் முடிவடைந்த கையோடு அரசமைப்பு உருவாக்கும் விடயங்கள் முன்னெடுக்கப்பட்டு, அரசமைப்பு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, மக்கள் தீர்ப்புக்கு கொண்டு வரப்பட வேண்டும். இதில் தாமதம் இருத்தல் கூடாது.

அத்துடன், காணாமல்



ஆக்கப்பட்டோர் தொடர்பான பணிமனையின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். வரவு - செலவுத் திட்டத்தில் இவ்விடயம் தொடர்பில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டமை வரவேற்கத்தக்கது.

இராணுவத்தால் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்ட காணிகள் விடுவிக்கப்பட வேண்டும். இதற்கு ஏதுவாக பயங்கரவாதத் தடைச்சட்டம் இல்லாதொழிக்கப்பட வேண்டும்.காணிகள் விடயத்தில் 1981 ஆம் ஆண்டுக்கு முன் இருந்த சட்டவிதிகளை அடிப்படையாகக் கொண்டு செயற்பட வேண்டும்.

இதனடிப்படையில் புதிதாகக் கொண்டு வரப்பட்ட வனபரிபாலன திணைக்களம், வன சீவராசிகள் சட்டம், தொல்பொருள் ஆய்விடங்கள் தொடர்பான சட்டம், மகாவலி அதிகார சபை தொடர்பான விடயங்கள், கரையோரப் பாதுகாப்புச் சட்டம் என்பன மீள்பரிசீலனை செய்யப்பட்டு அண்மைக் காலங்களில் அரசுக்குச் சொந்தமாக்கப்பட்ட காணிகள் பழைய நிலைமைக்குக் கொண்டு வரப்பட்டு அவற்றின் மீது மாகாண அரசின் செயற்பாடு அனுமதிக்கப்பட வேண்டும்.

குடும்பத் தலைமை தாங்கும் பெண்கள், முன்னாள் போரா ளிகள், பெற்றோரை இழந்த பிள்ளைகள் தொடர்பில் கரிசனை காட்டப்பட வேண்டும். வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் இடம்பெயர்ந்துள்ள தமிழ் மக்கள் சர்வதேச நியமங்களின் அடிப்படையில் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும்.

இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் வழங்கக் கூடிய விதத்தில் தொழில்துறைகள் உருவாக்கத்துக்கு வழி வகைகள் மேற்கொள்ள வேண்டும். இதற்கான நிதி உதவிகளை நேரடியாகப் பெறுவதற்கு மாகாணங்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்.

கைதிகளின் சித்திரவதை தொடர்பில் நாகரிகமடைந்த நாடுகளில் காணப்படுகின்ற முறைமைகள் இங்கு கையாளப்பட வேண்டும். குற்றம் சாட்டப்பட்டவரே குற்றவாளி என்ற வகையில் தான் நோக்கப்படுகின்றார்கள்.

கைதுகளின் பின்னர் தூசித்தல், வன்முறைகளைக் கையாளுதல் என்பன இங்கு இயல்பாகவே நடைபெறுகின்றன. இவை தொடர்பிலும் சர்வதேச நியமங்கள் பேணப்பட வேண்டும்.

இவைபோன்ற பல்வேறு விடயங்கள் வலியுறுத்தப்பட்டதாகவும், இவை தொடர்பில் தங்கள் அரசு கூடிய கவனம் செலுத்தும் எனவும் இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்க தூதரகத்தின் பிரதித் தலைமை அதிகாரி தெரிவித்துள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

(க)

# வீதி புனரமைக்கப்படா விட்டால் தேர்தலைப் பகிஷ்கரிப்போம்!

மட்டக்களப்பு, நவ. 18

திருகோணமலை மொறவெவ பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட நாமல்வத்தை பிரதான வீதியை புனரமைத்துத் தருமாறு அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மொறவெவ சந்தியிலிருந்து 10 கிலோ மீற்றர் செல்லும் நாமல்வத்தை வீதி பல வருட காலமாகத் திருத்தப்படாத நிலையில் குண்டும் குழியுமாகக் காணப்படுவதாகவும், அந்த வீதியூடாக எந்த வாகனமும் பயணிக்க முடியாத நிலை காணப்படுகிறது எனவும் அந்தப் பகுதி மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இந்த நிலை காரணமாக அந்தப்பகுதியில் அரச பேருந்து கூட சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை எனவும் இதன் காரணமாகத் தமது போக்குவரத்து நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்குகிறோம்



என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.


இதுதொடர்பில் அந்தப் பகுதி மக்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தேர்தல் காலங்களில் அரசியல்வாதிகள் கிராமத்துக்கு வருகை தந்து, நிதி ஒதுக்கப்பட்டுள்ளது, தேர்தல் முடிவடைந்தவுடன் வீதி அபிவிருத்திப் பணிகளை ஆரம்பிக்கவுள்ளதாக நடைபெற்று வந்த தேர்தலின் போது வாக்குறுதிகளை வழங்கினர்.

ஆனாலும் குறித்த வீதி, அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான வீதியா? அல்லது நீர்ப்பாசனத்திணைக்களத்திற்கு சொந்தமான வீதியா? அல்லது மொறவெவ பிரதேச சபைக்குச் சொந்தமான வீதியா? என்ற விடயம் கூட இன்னும் தெரியாத நிலைக்கு திருகோணமலை மாவட்ட அரசியல்வாதிகள் பொய் கூறி மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

இம்முறை இடம்பெறவுள்ள தேர்தலுக்கு முன்னதாக நாமல்வத்தை மொறவெவ பிரதான வீதியைப் புனரமைத்துத் தராத பட்சத்தில் நாம் தேர்தலை பகிஷ்கரிக்கவும் தயாராக உள்ளோம் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

## சட்டவிரோத மண் ஏற்றிய நபர் கைது!



திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதி கிண்ணியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உப்பாறு பாலத்துக்கு கீழ் சட்டவிரோதமாக மண் ஏற்றிய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் திருகோணமலை பிராந்திய போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி எஸ்.ஐ.ஜனோசன் தெரிவித்துள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்தே இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இதன்போது உழவு இயந்திரமொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட நபர் கிண்ணியா, நடுத்தீவு - 6 பகுதியைச் சேர்ந்த 29 வயதுடையவர் எனத் தெரிய வந்துள்ளது.

மேலும், கைது செய்யப்பட்ட நபர் உழவு இயந்திரத்துடன் கிண்ணியாப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது எனவும், திருகோணமலை நீதவான்நீதிமன்றில் முன்னிலைப்படுத்து துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக கிண்ணியாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## உழவு இயந்திர சில்லுக்குள் சிக்கி இளைஞர் பலி!



மட்டக்களப்பு, நவ. 18

மட்டக்களப்பு - செங்கலடி, தோடிச்சோலை ஆற்றிலிருந்து மணல் ஏற்றி வந்த உழவு இயந்திரத்தில் சிக்கி கூலித் தொழில் செய்யும் இளைஞரொருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளதுடன், இதில் கொடுவாமடு - தம்பானவெளி பகுதியைச் சேர்ந்த லவன் எனும் 17 வயது இளைஞரே உயிரிந்துள்ளார்.

தோடிச்சோலை ஆற்றில் இருந்து மண் ஏற்றி வந்த உழவு இயந்திரத்தில் இந்த இளைஞர் பயணித்த நிலையில் சறுக்கி விழுந்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து அவரின் இதயம் சார்ந்த நெஞ்சுப்பகுதியின் மீது சுமை கூடிய உழவு இயந்திரத்தின் சில்லு ஏறிச் சென்றுள்ளது.

இதன்போது அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

# திருகோணமலை எண்ணெய்க் களஞ்சியங்களால் ஆசியாவுக்கே விநியோகம் மேற்கொள்ளலாம்

கொழும்பு, நவ. 18

திருகோணமலையில் உள்ள எண்ணெய்க் களஞ்சியத் தொகுதி முழுமையாக இயங்கச்செய்யப்பட்டால், ஆசியப் பிராந்தியத்துக்கே எண்ணெய் விநியோகத்தை இலங்கையால் மேற்கொள்ள முடியும் என்று அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஏற்பட்ட எரிபொருள் தட்டுப்பாடு தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழுவின் தலைவரான கலாநிதி சரத் அமுனுகம இதுதொடர்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-



பெற்றோலியக் கூட்டுத்தாபனம், குறைந்தபட்ச எரிபொருள்கையிருப்பைப்பேணுவதற்குத் தவறியதே, இந்த நெருக்கடிக்குப் பிரதான காரணம்.

செயற்கைத் தட்டுப்பாடும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது குறித்து விசாரிக்கப்படவேண்டும்.மக்களின் நாளாந்த வாழ்வில் ஏற்பட்ட பிரச்சினைக்கு அரசு பொறுப்பேற்கிறது.

**அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவிப்பு**

குறைந்தபட்ச கையிருப்பை மேற்கொள்ளத் தவறிய, பெற்றோலியக் கூட்டுத்தாபன நிர்வாகத்தின் செயலை எந்த வகையிலும் மன்னிக்க முடியாது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம், 90 ஆயிரம் மெற்றிக்தொன் எரிபொருளை களஞ்சியப்படுத்தும் வசதிகள் உள்ளன. ஆனால், 20 ஆயிரம் மெற்றிக் தொன் எரிபொருள் கூடக் கையிருப்பில் இருக்கவில்லை.

குறைந்தபட்சகையிருப்பை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பேணத்தவறியமைக்கு எந்தக் காரணமும் இல்லை.

எண்ணெய் களஞ்சியப்படுத்தும் வசதிகளை அதிகரிக்க வேண்டும். திருகோணமலையில்உள்ளஎண்ணெய்க் களஞ்சியங்களை முழுமையாக இயங்கச் செய்தால், ஆசியா முழுவதற்கும் எம்மால் எரிபொருளை விநியோகிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பில்கேட்ஸை சந்தித்தார் ராஜித!




கொழும்பு, நவ. 18

உலகின் செல்வந்த நபர்களில் ஒருவரான பில்கேட்ஸுக்கும் சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச வைத்தியத் துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்னவுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

அபுதாபியில் நடைபெறும் சர்வதேச சுகாதார அமைச்சர்களின் மாநாட்டில் கலந்துகொண்டபோதே இருவருக்கும் இடையில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது பில்கேட்ஸ் கருத்துத் தெரிவிக்கையில்–

இலங்கையில் சுகாதாரத் துறை மேம்பாட்டுக்காக நீங்கள் மேற்கொண்டு வரும் பணிகளை நான் அறிவேன். இதனை நிறைவேற்றுவதற்கு உதவிகளை வழங்குவேன் என்று அமைச்சர் ராஜித சேனரத்னவிடம் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

# 7 ஆவது சார்க் திரைப்பட விழா 21 ஆம் திகதி முதல் 25 திகதி வரை

ஏழாவது வருடாந்த சார்க்திரைப்பட விழா அடுத்த வாரம் நடைபெறவுள்ளது.

சார்க் கலாசார நிலையம் ஏற்பாடு செய்துள்ள இந்த விழா, எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி 25 ஆம் திகதி வரை இடம்பெறும்.

இம்முறை ஆப்கான், பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மாலைதீவுகள், நேபாளம், இலங்கை ஆகிய சகல அங்கத்துவ நாடுகளைச் சேர்ந்த திரைப்படங்களும், குறும் படங்களும் இங்கு திரையிடப்பட உள்ளன.

கறுவாக்காடு - பௌத் தாலோக்க மாவத்தையில் அமைந்துள்ள தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன திரையரங்கில் இவை திரையிடப்படவுள்ளன. இதற்கான அனுமதி இலவசம்.

இதனுடன் இணைந்ததாக எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சர்வதேச நிபுணர்களின் பங்கேற்புடன் திரைப்பட பாடநெறியொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என ஆலோசகர் தனுஷ்க்க குணதிலக்க தெரிவித்துள்ளார்.




# புலம்பெயர் தொழிலாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் அடுத்த வருடம்!

கொழும்பு, நவ.18

புலம்பெயர் இலங்கைத் தொழிலாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தின் மூலமான கொடுப்பனவுகள் அடுத்தவருடம் வழங்கப்படும் என்று வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் நீதி அமைச்சர் தலதா அத்துக்கோரள தெரிவித்துள்ளார்.

புலம்பெயர் இலங்கைத் தொழிலாளர்களுக்கான உத்தேச ஓய்வூதியத் திட்டத்தின் மூலம் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதமளவில் கொடுப்பனவுகளை வழங்கக்கூடியவையாக இருக்கும் என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.




வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் தம்மைப் பதிவு செய்துகொண்டு வேலைவாய்ப்புகளுக்காகச் சென்ற இடத்தில் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்ட 38 பேருக்கு நேற்றுமுன்தினம் இழப்பீடுகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டபோதேஅமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது ஒரு கோடி ரூபாவுக்கு மேலான தொகை இழப்பீடாகப் பகிர்ந்தளிக்கப்பட்டது.

இலங்கையிலிருந்து வெளிநாடுகளிற்கு வேலை செய்வதற்காக சென்ற தொழிலாளர்களில் பலர் சிரமங்களை எதிர்கொண்டனர்.

பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு இந்தவருடம் இரண்டு கோடி ரூபாவுக்கு மேலான தொகை இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

# யாழ்.மாநகர சபை ஓய்வு நிலை சுகாதார பணியாளர்களுக்கு நிரந்தர நியமனம்!





யாழ்ப்பாணம், நவ. 18

யாழ் .மாநகர சபையில் ஓய்வுநிலை வயதை அண்மித்துள்ள சுகாதாரப் பணியாளர்களுக்கு நிரந்தர நியமனக் கடிதங்களை வட மாகாண ஆளுநர் ரெயினோல்ட் கூரே வழங்கி வைத்தார்.

நேற்றுக் காலை 9 மணியளவில் நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வு யாழ். சுண்டுக்குளியில் அமைந்துள்ள ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

யாழ்.மாநகர சபையில் கடந்த 10 முதல் 30 வருடங்களாக சுகாதாரப் பணியாளர்களாக சேவையாற்றுபவர்களில் 10 பேர் ஓய்வு வயதை அடைந்துள்ள நிலையில் நிரந்தர நியமனம் வழங்கப்படாது இருந்தனர்.

பணியாளர்கள் தமது நிரந்தர நியமனத்தை வலியுறுத்தி கடிதங்களை வரைந்தபோதும் அவர்கள் 45 வயதைக் கடந்திருந்த காரணத்தால் நியமனங்கள் மறுக்கப்பட்டு வந்தன.

இந்த நிலையில், மாநகர ஆணையாளர் விடுத்த வேண்டுகோளின் பேரில் ஆளுநரின் விசேட அனுமதியுடன் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன், உதவிச் செயலர் ஏ.எக்ஸ்.செல்வநாயகம், புதிதாக பதியேற்ற யாழ். மாநகர ஆணையாளர் ஆர்.ரி.ஜெயசீலன் மற்றும் உதவி ஆணையாளர் சீராளன் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

# இளங்கலைஞர் மன்ற கலையரங்கில் இன்று விசேட தவில் நாதஸ்வரம்

நல்லூர், சட்டநாதர் வீதி இளங்கலைஞர் மன்ற மாதாந்த கலையரங்கில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு விசேட தவில், நாதஸ்வரக் கச்சேரி இடம்பெறும்.

நாதஸ்வரம் :-

'நாதஸ்வர சக்கரவர்த்தி' அளவையூர் எம்.பி. பாலகிருஷ்ணன், 'நாதஸ்வர கானவிநோதன்' ஈழநல்லூர் பி.எஸ்.பாலமுருகன்.

தவில்:-

கலைமாமணி காஞ்சிகாமகோடி பீட ஆஸ்தான வித்துவான்களான டாக்டர் எம்.ஆர். வாசுதேவன், கே.ஜி.கல்யாணசுந்தரம் மற்றும் 'இளம் தவில் வித்துவான்' ஈழநல்லூர் பி.எஸ்.செந்தில்நாதன்.

(இ)

# தேசியக் கொடியை ஏற்ற மறுப்பாரானால் சர்வேஸ் பதவியில் நீடிக்கத் தகுதியற்றவர்!

## கல்வி ராஜாங்க அமைச்சர் ராதாகிருஷ்ணன் சீற்றம்

தேசியக் கொடியை ஏற்ற அமைச்சர் சர்வேஸ்வரன் மறுப்பு தெரிவிப்பாரானால், அவர் அந்த பதவிக்கு தகுதியானவர் அல்லர் என்று கல்வி ராஜாங்க அமைச்சர் ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் வவுனியாவில் உள்ள சிங்கள பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற நிகழ்வொன்றிற்கு, வடமாகாண கல்வி அமைச்சர் க. சர்வேஸ்வரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டிருந்தார்.

தேசியக் கொடியை ஏற்றுவதற்கு அவர் அழைக்கப்பட்டபோது, அதற்கு அவர் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இதனால், அந்தப் பாடசாலையின் அதிபரால் தேசியக் கொடி ஏற்றப்பட்டு நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் கல்வி ராஜாங்க அமைச்சர் வீ.ராதாகிருஷ்ணன் கருத்துத் தெரிவிக்கையில்-

அவரது செயல் தவறானது. நாட்டின் பிரஜை என்ற அடிப்படையில் நாம் அனைவரும், தேசிய கொடிக்கு மதிப்பளிக்க வேண்டும்.

இவ்வாறாக தேசிய கொடியை ஏற்றுவதற்கு அவர் மறுப்பாரானால், அவர் அந்த பதவியில் தொடர்வதற்கு தகுதியானவர் அல்லர் என்றும் ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

## தினசரி ராசி பலன் 18.11.2017

*2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் கார்த்திகை திங்கள் 3ஆம் நாள் சனிக்கிழமை. அமாவாசைத் திதி பகல் 5.12 மணிவரை. பின்னர் பிரதமை. நட்சத்திரம் விசாகம் மாலை 7.24 மணிவரை பின்னர் அனுஷம். சித்தயோகம் முழுவதும்.*

**ராகுகாலம்** - *பகல் 9.01 மணிமுதல் 10.28 மணிவரை.*

**சுபநேரம்** - *மாலை 3.14 மணிமுதல் 4.44 மணிவரை.*

**திவசம் செய்ய வேண்டிய திதி** - *கார்த்திகை மாத அமாவாசை.*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *விசாகம்.*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம் :** கவலையான நாள். பொருளாதாரம் நலிவடையும். குடும்பத்தில் உட்பூசல்கள் உண்டாகும். வியாபாரம் மந்தநிலையில் நடக்கும். உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும்.

**ரிஷபம் :** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு இருப்பினும் செலவுகள் அதிகமாகும். வியாபாரத்தில் வருமானம் ஏறு இறங்கு முகமாக காணப்படும்.

**மிதுனம்:** சுபீட்சமான நாள். பணம் எல்லா வழிகளாலும் கிடைக்கும். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். சொந்த வீட்டுக்கு குடிபோகும் யோகம் உண்டாகும்.

**கடகம்:** ஆக்கபூர்வமான பலன்கள் காணப்படுகின்றன. பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும். மேலதிகாரிகளில் அனுசரணையால் உயர் பதவிகள் கிடைக்கும்.

**சிம்மம்:** சஞ்சலம் நிறைந்த நாள். பணவரவு குறையும். எதிர்பார்த்த காரியங்கள் இழுபறியில் இருக்கும். குடும்பத்தில் அமைதி குறைந்து காணப்படும். வியாபாரத்தில் பொருள்கள் தேங்கிக் கிடக்கும்.

**கன்னி :** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் மத்திமமாக இருக்கும். செலவுகள் அளவுக்கதிகமாக இருக்கும். வியாபாரத்தில் மத்திம லாபம் கிடைக்கும்.

**துலாம் :** யோகமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும் குடும்பத்தில் அன்னியோன்னியம் அதிகரிக்கும். உத்தியோகத்தர்களின் எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**விருச்சிகம் :** மகிழ்ச்சியான நாள். பொருளாதார வளர்ச்சி நன்மை தரும். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைக்கும்.

**தனுசு :** துயரமான நாள். வருமானம் குறையும். குடும்பத்தில் பிரச்சினைகள் உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு சக பணியாளர்களுடன் கருத்து மோதல் உண்டாகும்.

**மகரம் :** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றம் அடையும். குடும்ப மகிழ்ச்சி மேலோங்கும். வியாபாரம் வளர்ச்சி அடையும். உத்தியோகத்தர்களுக்கு மதிப்பு கூடும்.

**கும்பம்:** மத்திமமான நாள். வருமானம் சுமாராக இருக்கும். வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். வியாபாரிகளுக்கு வங்கிகளில் கடன்கள் பெறும் முயற்சிகளில் தாமதம் ஏற்படும்.

**மீனம் :** சுபீட்சமான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். ஆடை, அணிகலன்கள் சேர்க்கையால் பெண்கள் மகிழ்வார்கள்.

**சந்திராட்டமநாள்:** பூரட்டாதி 4ஆம் பாதம் ,உத்தரட்டாதி ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்கள் இன்று சுபகருமங்களைத் தொடங்குவதைத் தவிர்க்க வேண்டும்

# யாழ். சாயி நிலையத்தில் மகளிர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ.18

யாழ். திருநெல்வேலி சேர். பொன். இராமநாதன் வீதி, பகவான் ஸ்ரீ சத்தியா சாயிசேவா நிலையத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை, மகளிர் தின நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

நாளை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்வுகள் மதியம் 12.45 மணிக்கு, மதிய போசனத்துடன் நிறைவுறும்.

நிகழ்வில் சிறப்புச் சொற்பொழிவை பேராசிரியை மனோன்மணி சண்முகதாஸ் நிகழ்துவார். நிலைய மகளிர் பங்கேற்கும் இரு நாடகங்களும் நடைபெறும். ''கண்ணகி நீதி கேட்கும் படலம்'' ''பத்திலிருந்து ஐம்பது வரை'' என்ற நாடகங்களே அவையாகும்.

சத்தியசாயி பாபாவால் 1975 ஆம் ஆண்டு நவம்பர் 19 ஆம் திகதியை ''மகளிர் தினமாக'' பிரகடனப்படுத்தப்பட்டதிலிருந்து உலகெங்கிலும் ஆயிரக்கணக்கான சத்தியசாயி நிலையங்களில் மகளிர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் திரு விளக்கு பூஜை செய்யவிரும்புவோர், அதற்கான ஆயத்தங் களுடன் வருமாறு சாயி நிலையத்தினர் அறிவித்துள்ளனர்.

(இ)

## யாழ். நூலகத்தில் மாதாந்த உரை நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.18

யாழ் பொதுசன நூலக வாசகர் வட்டத்தின் மாதாந்த உரைநிகழ்ச்சி இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நூலக குவிமாட கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இதன்போது, 'இலங்கையின் வரலாற்றில் பௌத்தமும் தமிழும், தமிழர்களும்' எனும் தலைப்பில் அ.சி.உதயகுமார் உரையாற்றுவார். தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும்.

ஆர்வலர்களைக் கலந்து கொள்ளுமாறு வாசகர் வட்டத்தினர் கேட்டுக் கொள்கின்றனர்.

(இ)

## யாழ். வேம்படியில் உலக நீரிழிவு தின நிகழ்வுகள் இன்று

*யாழ்ப்பாணம், நவ.18*

*யாழ். வேம்படி மகளிர் பாடசாலையில் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு, உலக நீரிழிவு தின நிகழ்வுகள், யாழ் நீரிழிவுக் கழகத்தின் தலைவர் தி.மைக்கல் தலைமையில் இடம் பெறும்.*

*நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் வடமாகாண பிரதி சுகாதாரசேவைகள் பணிப்பாளர் டொக்டர் அ.திலீபன் உரையாற்றுவார். யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் டொக்டர் இ.சுரேந்திரகுமார், யாழ். போதான வைத்தியசாலை நீரிழிவு நிலைய டொக்டர் எம்.அரவிந்தன், யாழ் மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் பொ.ஜெசிதரன் ஆகியோர் சிறப்புரைகளை ஆற்றுவர்.*

*தொடர்ந்து யாழ். மாநகர சபை சுகாதாரப் பிரிவின் நீரிழிவு மருத்துவ முகாமும், மூலிகைகளின் கண்காட்சியும் யோகா செயலமர்வும் இடம்பெறும்.*

*அனைவரையும் நிகழ்வுக்கு வருகை தந்து பயனடையுமாறு யாழ். நீரிழிவுக் கழகத்தினர் அழைக்கின்றனர்.*

*(இ - 19)*

# மின்தடை அறிவித்தல்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணிவரை-

**யாழ் பிரதேசத்தில்** - அரசர்கேணி, கச்சாய் வெளி, கரம்பகம், தர்மக்கேணி, முகமாலை, இத்தாவில், எழுதுமட்டுவாழ், உசன், கிளாலி, விடத்தற்பளை, கெற்பலி, மிருசுவில் தெற்கு, தவசிக்குளம், நாவலடி, வறுத்தலைவிளான், வீமன்காமம், தையிட்டி, பலாலி விமானப்படை முகாம், மிருசுவில் ரோக்கியோ சீமெந்து, மிருசுவில் 52ம் பிரிவு இராணுவ முகாம், ஸ்ரான்லி வீதி, மணிக்கூட்டு வீதி, கஸ்தூரியார் வீதியில் ஒரு பகுதி, மின்சார நிலைய வீதி, Grand Bazzar, விக்ரோறியா வீதி, பருத்தித்துறை வீதியில் ஒரு பகுதி -

ஏற்கனவே அறிவிக்கப்பட்டதற்கு மேலதிகமாக -

**நாளை ஞாயிற்றுக்கிழமை** காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை-

**யாழ் பிரதேசத்தில்** வறாத்துப்பளை புனிதநகர், திக்கிரி, கற்கோவளம், மாதனை, நெல்லண்டை, பருத்தித்துறை, வெளிச்சவீடு, சிவப்பிரகாசம், 3 ஆம் குறுக்குத்தெரு பிரதேசம், கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை -

**கிளிநொச்சிப் பிரதேசத்தில்** - மல்லாவி, அனிச்சங்குளம், பாரதிநகர், திருநகர், யோகபுரம், தேராங்கண்டல், தென்னியங்குளம், ஆலங்குளம், தெனியங்குளம், துணுக்காய், விநாயகபுரம், கல்விளான், பிள்ளையார் அரிசி ஆலை, மொடோன் அரிசி ஆலை, 65 infantry மல்லாவி தேசிய நீர் வழங்கல் வடிகால் சபை -

**வவுனியா பிரதேசத்தில்** பஸார் வீதி, மில் வீதி, தர்மலிங்கம் வீதி, சந்தை சுற்றுவட்ட வீதி, இலுப்பையடி ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் எம்.துவாரகன் அறிவித்துள்ளார்.

(இ)

# தமிழர் தாயகத்தில் இன்னும் கூட யுத்த காலச் சூழலே தொடர்கிறது

## மன்னாரில் உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் நிலையத்தைத் திறந்து வைத்து அமைச்சர் அனந்தி உரை

இலங்கை அரசால் தமிழர் தாயகத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுவந்த யுத்தம் முடிவடைந்தாலும் யுத்தகால சூழல் இன்றும் தொடர்வதாக வட மாகாண மகளிர் விவகாரம் புனர்வாழ்வு அமைச்சர் அனந்தி சசிதரன், வட மாகாண தொழிற்றுறை திணைக் களத்தின் ஏற்பாட்டில் உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் விற்பனை நிலையம் ஒன்றை கடந்த புதன்கிழமை வைபவ ரீதியாக திறந்து வைத்து உரையாற்றுகையில் தெரிவித்துள்ளார்.



மன்னார் பிரதான பாலத்தடி பெரியகடை பகுதியில் அமைக்கப்பட்டுள்ள. உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் விற்பனை நிலையத்தைத் திறந்து வைத்த பின்னர் அவர் உரையாற்றுகையில் -

யுத்தம் முடிவடைந்து ஒன்பது வருடங்கள் கடந்த பிற்பாடும் மன்னார் நகரப்பகுதியைப் பார்க்கின்ற பொழுது இப்பொழுதும் யுத்தத்திற்குள் இருக்கின்றதான சூழலைப் போன்றே காணப்படுகின்றது. நகர அபிவிருத்தி என்பது மன்னார் மாவட்ட மக்களைப் பொறுத்தவரையில் இன்னும் பல வருடங்கள் செல்லலாம்.

திட்டமிடப்பட்ட வகையில் யுத்தத்தை நடத்திவிட்டு தொடர்ந்தும் யுத்த சூழலில் இருப்பதான ஒரு நிலையை தமிழர் பகுதிகளில் ஏற்படுத்தியே இந்த அரசு சென்றுகொண்டிருக்கின்றது. ஏ9 வீதியால் செல்லும் போது கிளிநொச்சி பகுதியைப் பார்த்தோமேயானால் மிகவும் அபிவிருத்தியைக் கண்ட இடமாகக் காட்சியளிக்கிறது. ஆனால் கிராமங்களுக்குள் இறங்குகின்றபோது வீதிகளில் இருந்து மக்களுடைய வாழ்வாதாரம் என எல்லாமே பூச்சியமான நிலையில்தான் இருக்கின்றன.



கிராமங்களில் இருந்து அபிவிருத்தியைக் கொண்டு வருவதன் மூலம் தான் நல்லதொரு சமூக மாற்றத்தை ஏற்படுத்த முடியும். அந்தவகையில் சந்தைப்படுத்தலுக்காக இந்தப் புதிய கட்டடம் திறந்து வைக்கப்பட்டிருப்பது மக்களுடைய உற்பத்திப் பொருள்களை சந்தைப் படுத்துவதற்கான அரிய சந்தர்ப்பமாகவே நாங்கள் பார்க்கின்றோம்.

வடமாகாணத்திற்குட்பட்ட ஐந்து மாவட்டங்களிலும் தொழில்துறை தொடர்பான பல வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இன்னும் நிறைய வேலைகள் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம்.

ஆனால், இலங்கை அரசின் ஒத்துழைப்பு கிடைக்காமை பெரும் பின்னடைவாக உள்ளது.

இம்முறை வரவு - செலவு திட்டத்தை பார்த்தோமேயானல் கவர்ச்சிகரமான திட்டங்களாகப் போடப்பட்டிருக்கின்றன. ஆனால், இதை எவ்வாறு நடைமுறைப்படுத்தப் போகின்றது என்றால் மத்திய அரசு நேரடியாகவே தான்நடைமுறைப்படுத்தப்போகின்றது.

வடக்கு மாகாண சபையை புறந்தள்ளி ஏற்கனவே அவர்கள் திட்டமிட்ட பல கோடி ரூபா பெறுமதியான திட்டங்கள் நடை முறைப்படுத்த முடியாமல் மூடப்பட்ட நிலையை வட மாகாணம் முழுவதும் பார்க்கின்றோம். பல அரிசி ஆலைகள், உயிர் உரம் தயாரிக்கும் திட்டங்கள் எல்லாமே பல கோடிக்கணக்கில் இலங்கை அரசால் நேரடியாகத் திட்டமிடப்பட்டு உருவாக்கப்பட்டு கைவிடப்பட்ட திட்டங்களாகும்.

வடக்கு மாகாண சபையால் உருவாக்கப்பட்ட திட்டங்கள் எங்களுடைய நேரடிக் கண்காணிப்பில் அல்லது எங்களுடைய அதிகாரிகளின் மேற்பார்வையில் அவை நடைமுறைப் படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே, கவர்ச்சிகரமாக சர்வதேசத்தை ஏமாற்றுகின்ற விதத்தில் அமைந்துள்ள இந்த வரவு - செலவு திட்டம் வடக்கு மாகாணத்தை திட்டமிட்ட வகையில் புறந்தள்ளி தாங்களே நேரடி யாக இந்த அபிவிருத்தியை செய்து நயவஞ்சகமான செயற்பாடாகும்.

எமது மக்கள் மத்தியில் இருந்து மக்கள் பிரதிநிதிகளைப் புறந்தள்ளி ஓரங்கட்டும் செயற்பாடாகவே நாங்கள் இதனைப் பார்க்கின்றோம். இன்னும் தென்னிலங்கையை சார்ந்துதான் நாங்கள் இருக்கின்றோம். எங்களுடைய வருமானம் அல்லது தேவைகள் எல்லாவற்றிற்கும் தென்னிலங்கையை நாடிநிற்கும் நிலை தான் உள்ளது.

எங்களுக்கு ஓர் எதிர்பார்ப்பு இருக்கின்றது. எங்களுக்கென்று சுய பொருளாதாரத்தையும் சுய சந்தைகளை உருவாக்குவதன் ஊடாகத்தான் இவ்வாறான அரசினுடைய காலைப் பிடிக்காமல் நாங்கள் நாங்களாகவே இருக்கக் கூடியதான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பலாம் என்று நம்புகின்றோம்.


அந்தவகையில்தான், நாங்கள் கிராமங்கள் தோறும் கிராமியப் பொருளாதாரத்தை பல வழிவகைகளில் சிறிய சிறிய தொழில் முயற்சிகளை ஊக்குவிப்பது மட்டுமல்லாது உற்பத்திப் பொருள்களை உருவாக்கி சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்பை பெற்றுக்கொடுத்து மக்களை தங்களுடைய கால்களில் தன்னம்பிக்கையுடன் வாழச் செய்வதற்கான முயற்களில் ஈடுபட்டிருக்கின்றோம்.

தொடர்ந்தும் எங்களுடைய வடக்கு மாகாணத்தை சகல வழிகளிலும் மேம்படுத்த முயன்று வருகின்றோம். அதற்கு மக்களாகிய உங்களது ஒத்துழைப்பு அவசியமாகும். உங்கள் உங்கள் கிராமங்கள் சார்ந்த அபிவிருத்தி திட்டங்களையும் ஆலோசனைகளையும் நீங்கள் தெரிவிக்கும் போது அவற்றைப் பரிசீலித்து நடை முறைப் படுத்த நாங்கள் தயாராக உள்ளோம்.

வடக்கு மாகாணத்தில் யுத்தம் காரணமாக பல இழப்புகள் வந்திருந்த நிலையில் இன்று தொழில் வாய்ப்புகள் இல்லாத காரணத்தால் பலர் சமூக விரோதிகளாக மாறிக்கொண்டிருக்கின்றமையையும் அவதானிக்க முடிகின்றது என அமைச்சர் மேலும் தெரிவித்திருந்தார். (இ)









காலைக்கதிர் Kalaikkathir




# "ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?" 350

தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா

**அமெரிக்க ஏகாதிபத்தியம், ஒரு துயரமான சூழ்நிலையை உருவாக்க தயார்நிலையில் உள்ளது.**

டொனால்ட் ட்ரம்புக்கு சீன ஆட்சி வழங்கிய பெரும் அரசு மரியாதையும், சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் மற்றும் அவரது மனைவியின் ஆர்வம் நிறைந்த முகஸ்துதியிலான பிந்தைய கலந்துரையாடலும், அமெரிக்க ஜனாதிபதி வட கொரியாவிற்கு எதிராக ஒரு புதிய அச்சுறுத்தலை விடுப்பதையோ, அமெரிக்க பெரு நிறுவனங்களுக்கு பெரிய பொருளாதார சலுகைகளை வழங்குமாறு சீனாவுக்கு இறுதி எச்சரிக்கை விடுப்பதையோ தடுக்க முடியவில்லை.



ட்ரம்ப் டியானான்மென் சதுக்கத்தில் உள்ள பெரும் மக்கள் அரங்கத்தில் வைத்து, ஜனாதிபதி ஜி இன் அமர்வுடன் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் உயரடுக்கினர் மத்தியில் உரையாற்றினார்.

ட்ரம்பின் மற்ற உரைகளுடன் ஒப்பிடுகையில்,அவரது தொனியையும் சொல்லாட்சியும் அளவிடுகையில், அங்கு அவராற்றிய உரையின் உள்ளடக்கம் கூட ஆத்திரமூட்டுவதாகவும், அச்சுறுத்துவதாகவும் இருந்தது. வட கொரியாவின் சிறிய அணு சக்தி ஆயுதங்கள் ஓர் இருப்பிற்கே அபாயகரமாக உள்ளது என்றொரு போலித்தனமான சாக்குப்போக்கில், அமெரிக்க ஏகாதிபத்தியம் கொரிய தீபகற்பத்தின் மீதான ஒரு பேரழிவுகர போரைத் தொடுக்கத் தயாராகி வருகிறது.

**ட்ரம்ப் பின்வருமாறு அறிவித்தார்: வட கொரியாவின் முழுமையான மற்றும் நிரந்தரமான அணுஆயுத ஒழிப்புக்கு அமெரிக்கா உறுதியளிக்கிறது. இந்த முரட்டுத்தனமான ஆட்சி அதன் அணு ஆயுதங்களைக் கொண்டு உலகை அச்சுறுத்த முடியாது என்பதை உறுதிப்படுத்த அனைத்து நாடுகளும் ஒருங்கிணைய வேண்டும். நேரம் வெகுவாக குறைந்து கொண்டிருக்கிறது. நாம் வேகமாக செயல்பட வேண்டும், அதிலும் சீனா, வேறெவரையும் விட இந்த பிரச்சினை குறித்து மிக வேகமாகவும், அதிக திறத்துடனும் செயல்படும் என நம்புகிறோம். இந்தச் சாத்தியமான மிகவும் துயரமான சூழ்நிலைக்கு கடிவாளமிட உதவுவதற்கு நான் ரஷ்யாவையும் துணைக்கு அழைக்கிறேன்.**

அமெரிக்க ஏகாதிபத்தியம், ஒரு துயரமான சூழ்நிலையை அல்லது மிகத் துல்லியமாக கூறுவதானால், பேரழிவுகரமான இறப்பையும் அழிவையும் உருவாக்க தயார்நிலையில் உள்ளது. கொரிய தீபகற்பத்தின் கடலோர பகுதிகளில், கடல்வழி ஏவுகணைகளை தாங்கிய நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் தெரியாத எண்ணிக்கையில் கண்டம் விட்டு கண்டம் பாயும் அணுஆயுத ஏவுகணைகளுடன் கூடிய ஒஹியோ வகை நீர்மூழ்கிக் கப்பல்கள் ஆகியவற்றுடன் இணைந்து, மூன்று விமானந் தாங்கி கப்பல்கள் போர்க்கால குழுக்களுடன் நிலைநிறுத்தப்பட்டுள்ளன. மேலும், தென் கொரியா, ஜப்பான், குவாம் மற்றும் அலாஸ்காவில் நூற்றுக்கணக்கான விமானப்படை ஜெட் போர் விமானங்களும், டசின் கணக்கான



தொலை தூரக் குண்டு வீசிகளும் தயார் நிலையில் உள்ளன.

தசாப்த காலத்திற்கும் மேலாக மூன்று விமானந்தாங்கி கப்பல்களை ஈடுபடுத்தி நடத்தப்பட்டுவரும் முதல் கூட்டு கடற்படை பயிற்சிகளை கடற்படைக்குரிய போர்க் கப்பல்களின் தொகுப்பு நவம்பர் 11 முதல்இடம்பெறும். நேரம் விரைவாக வெகுவாக குறைந்து கொண்டிருக்கிறது, என்ற ட்ரம்பின் அறிக்கை, இப்போர்க்கப்பல்களில் இரண்டை மிக நீண்ட காலத்திற்கு கிழக்கு ஆசியாவில் நிறுத்திவைக்க முடியாது என்ற நிலைமையில் குறிப் பாக ஆபத்தானது. அதில் ஒன்றான USS Theodore Roosevelt என்ற போர்க் கப்பல் பாரசீக வளைகுடாவிற்கு கடந்து செல்லும் ஒரு பகுதியில் மட்டுமே தங்கியிருக்கின்றது. மற்றொரு போர்க்கால குழுவான S Nimitz, ஜூன் முதல் செயல்பாட்டு பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகிறது. மேலும் பராமரிப்புக்காகவும், ஓய்வுக்காகவும் அதன் தளமான அமெரிக்க மேற்கு கடற்கரைக்கு அதனை திருப்பியனுப்பத் திட்டமிடப்பட்டுள்ளது.

**ட்ரம்ப் நிர்வாகம், பேச்சுகும் மற்றும் முடக்கும் பொருளாதார தடைகளை தளர்த்துவதற்கும் பரிசீலிப்பதற்கு முன்னர், முழுமையான நிருபிக்கக் கூடிய அணுஆயுத ஒழிப்பு என்ற அமெரிக்காவின் இறுதி எச்சரிக்கையை நிராகரிப்பதாக வட கொரியா ஏற்கனவே சமிக்ஞை செய்துவிட்டது. வட கொரிய அதிகாரி ஒருவர் CNNசெய்தி ஊடகத்திற்கு பின்வருமாறு தெரிவித்தார்: அந்த பைத்தியக்கார நாய் (ட்ரம்ப்) என்ன சொன்னாலும் நாங்கள் கவலைப்படவில்லை, ஏனெனில் நாங்கள் போதுமான அளவு கேட்டுவிட்டோம். ஈராக்கும் லிபியாவும் இதேபோன்ற அமெரிக்க கோரிக்கைகளுக்கு அடிபணிந்தன. ஆனால் அவர்களது நாடுகள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு மற்றும் அவர்களது தலைமைகள் அகற்றப்பட்டதிலேயே முடிந்தது.**

இந்த காட்சிகளின் பின்னணியில், ட்ரம்ப் நிர்வாகத்திற்கு ஏதேனுமொரு வடிவிலான சரணடைதலை உருவாக்க கிம் ஜோங் உன் தலைமையிலான வட கொரிய உயரடுக்கிற்கு அழுத்தம் கொடுக்கும் விதமாக அமெரிக்க, தென் கொரிய, சீன, ரஷ்ய மற்றும் ஏனைய அதிகாரிகளை ஈடுபடுத்தும் தீவிர இராஜதந்திர பேச்சுகள் நடைபெறுகின்றனவா என்பதில் சிறு சந்தேகம் உள்ளது.



அமெரிக்க இராணுவத்திற்குள்ளே கூட போரின் விளைவுகளைப் பற்றி நடுக்கம் உள்ளது. ட்ரம்ப் நிர்வாகத்தால் கூறப்பட்ட இலக்குகளை அடைவதற்கு, வட கொரியா மீதான தரைவழி படையெடுப்பு ஒன்று மட்டும்தான் ஒரே வழி என்று பென்டகன் தயாரித்த



ஓர் அறிக்கை எச்சரித்தது.

ஒரு படையெடுப்புக்கு நூறாயிரக்கணக்கான துருப்புக்கள் தேவைப்படும் என்பதோடு, ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக்கில் நிகழ்ந்த சமீபத்திய அனுபவத்தையும், மற்றும் கொரிய வரலாற்றையும் அடிப்படையாக வைத்துப் பார்த்தால்,ஆக்கிரமிப்பு எதிர்ப்பு கிளர்ச்சியை அடக்குவதற்கு நீண்ட மற்றும் இரத்தக்களரியிலான நடவடிக்கைகளை தொடர்ந்து பின்பற்ற வேண்டியிருக்கும். நிதிச் செலவு டிரில்லியன் கணக்கிலான டொலர்களுக்கு இட்டுச் செல்லும். மனித விலை கொடுப்போ மில்லியன் கணக்கான உயிர்களாக இல்லாவிட்டாலும் கூட, நூறாயிரக்கணக்கான உயிர்களாக இருக்கும்.

இந்த அப்பட்டமான உண்மை, 1945 ஆம் ஆண்டிற்கு பின்னர் முதல் முறையாக அணு ஆயுதங்களைப் பயன்படுத்தும் அபாயத்தை மட்டுமே அதிகரிக்கிறது.

(கேள்வி தொடரும்)

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. ‘உன்னைச் சரணடைந்தேன்’ என்ற அவரது தொகுப்பில் ‘யாழில் கம்பன்’ பற்றிய தொடர் பதிவு இது.



# கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 09

## உன்னைச் சரணடைந்தேன்



### முதலாவது கம்பன் விழா 20.06.1980

**ஸ்கந்தமூர்த்தி**

என் இந்துக் கல்லூரி நண்பன் இவன். நான் கல்லூரியில் இணைந்த போது, அங்கு இவன் பெரிய பேச்சாளனாய் பேர் பெற்றிருந்தான். இவனது நக்கல்களுக்குப் பயந்து, இவனோடு மேடையில் பேச யாரும் முன்வரமாட்டார்கள். யாழ். இந்துக்கல்லூரியில் நான் பேசிய, முதல் வழக்காடு மன்றத்தில், வாதத்தில் இவனை மடக்கிப் பெயர்பெற்றேன். அதனால் என்னோடு பகை கொள்ளாமல் நட்பு பூண்டு ஆச்சரியப்படுத்தினான். பின்னாளில் கல்லூரியில் ஏ.எல்.யூனியன் தலைவர் பதவிக்கு, என் ஆதரவு வேண்டிப் போட்டியிட்டான். முதலில் ஆதரவு தந்து, பின்னர் கல்லூரியில் எங்கள் வகுப்புக்கு நடந்த அவமரியாதையால், வகுப்பு மாணவர்கள் தூண்ட, இவனோடு அந்தப் பதவிக்காய்ப் போட்டியிட்டு வென்றேன். அது பெரும் பகையாயிற்று. என்னோடு பேசுவதை நிறுத்தினான். ஆளுமையும், தலைமைத்துவமும் உள்ளவன். குரும்பசிட்டி இவனது ஊர். அந்தக் காலத்திலேயே அமிர்தலிங்கம் போன்ற தலைவர்கள் கூட, இவனை மதித்தனர். தன்னை நெறிப்படுத்தியிருந்தால், பெருந்தலைவனாகியிருக்க வேண்டியவன் இவன். அளவுக்கதிகமான கற்பனைகளால் அவ் உயர்வை இழந்தான். பின்னாளில் என்மேலான பகை மறந்து, மீண்டும் நட்புச் செய்தான். லண்டன் சென்று குடியேறி, கழக முயற்சிகளுக்குப் பல தரம் கை கொடுத்தான். ஆரம்பகாலத்துக் கழகப் பணிகளில், இவனது பங்களிப்பு இல்லை எனும்படியானதே.

**பிற நண்பர்கள்**

இவர்கள் தவிர, எனது ஒத்த வயது நட்பு வட்டாரத்தைத் தாண்டி, அறிவு சார் தொடர்பால் என்னை விட மூத்த இருவர், அந்தக் கால கழக வரலாற்றில் முக்கியத்துவம் பெறுகின்றனர். அவர்கள் பற்றியும் சொல்கின்றேன்.

**குமரன் பீ.ஏ.**


குமரன் எனக்கு ஆசிரியராகிப் பின் நண்பரானவர். கம்பன் கழகம் ஆரம்பித்த காலங்களில், இவரால் தான் எங்கள் விழாக்களுக்குக் கூட்டம் சேர்ந்தது. புகழ்பெற்ற ‘ரியூட்டரி’ ஆசிரியர். நல்ல பேச்சாளர். நல்ல கவிஞர்.நல்ல மனிதர். அரசியல் ஈடுபாடு உடையவர். எல்லாரோடும் அன்பு பாராட்டுபவர். அதனால் பெரிய நட்பு வட்டாரத்தைப் பெற்றிருந்தார். அதுதான் அவர் உயர்வுக்கும், தாழ்வுக்கும் காரணமாயிற்று. யாழ்ப்பாணம் முழுவதிலும், மற்றைய வெளி ஊர்களிலும் நானும் இவரும் செய்த வழக்காடு மன்றங்கள், அந்தக் காலத்தில் புகழ் பெற்றிருந்தன. எங்கள் வழக்காடு மன்றங்களுக்குப் பெரும்பாலும் வரதராஜப்பெருமாள் அல்லது திரு நந்தகுமார் ஆகிய இருவரில் ஒருவரே நடுவராய் இருப்பர். குமரனையும், வரதராஜப்பெருமாளையும் தான், எங்கள் கம்பன் கழகத்தின் தலைவர், செயலாளர்களாக்க வேண்டுமென, அக்காலத்தில் நினைத்திருந்தேன். ஒருமுறை கிண்ணியாவில் நடைபெற்ற வழக்காடு மன்றம் முடிந்து, ரயிலில் திரும்புகையில், எமக்குள் கம்பன்பற்றி ஏற்பட்ட வாக்குவாதத்தில், இவர்களது திராவிடக்கழக ஈடுபாடும், நாத்திகக் கொள்கையும் வெளிப்பட, அந்த எண்ணத்தை மாற்றினேன். குமரனுக்கிருந்த ஆற்றலுக்கு அவர் எங்கோ உயர்ந்திருக்க வேண்டியவர். ஒருமைப்படாத எண்ணவோட்டத்தால் அவ் உயர்வுகளை இழந்து நாடு கடந்தார். இன்று பிரான்ஸில் அவர் வாழ்க்கை தொடர்கிறது. ஆற்றல் அங்கு அவரை மதிப்புள்ளவராகவே வைத்திருக்கிறது.

**வரதராஜப்பெருமாள்**

பின்னாளில் முழுநேர அரசியலில் ஈடுபட்ட வரதராஜப் பெருமாள், குமரனது நெருங்கிய நண்பர். அதனால் அவர் எனக்கும் நெருங்கிய நண்பரானார். அவர் நடுவராய் இருக்க, நானும் குமரனும் வழக்காடுவோம். வரதராஜப் பெருமாள் பட்டிமண்டபத்தில் அறிமுகமாகி, பின் எனக்கு ‘ரியூட்டரி’யில் ‘லொஜிக்’ கற்பித்தார். உயர்தர வகுப்பில் விஞ்ஞானப் பாடங்களில் தோல்வியடைந்து, ஒரு தரம் கலைப் பிரிவில் பரீட்சை எடுக்க முடிவு செய்த போது, இவரது மாணவனானேன். கம்பீரமும் தெளிவும் இவரது தகுதிகள்.

மிகக் கஷ்டப்பட்ட குடும்பத்தில் இருந்து தலை நிமிர்த்தியவர். இவரது தாயார் வடை சுட்டு விற்றுப் பிள்ளைகளை வளர்த்தார். குமரனிடம் இருந்த வெகுளித்தனம் இவரிடம் இருக்கவில்லை. இவருக்குத் திருமணமாகி முதல் விருந்து எங்கள் வீட்டில்தான் நடந்தது. பரீட்சை நெருங்கிவிட திருமணமாகிய அடுத்தநாள் இரவே, என்னை வீட்டுக்குப் படிக்க வரச் சொன்னார். புதுமணத் தம்பதிகளாயிற்றே என நான் தயங்க, விளையாட்டாய் ‘என்ர வேலை எனக்குத் தெரியும் நீ வந்து படி’ என, கட்டாயப்படுத்தி வரவைத்துக் கற்பித்தார். அப் பாடத்தில் அவ்வாண்டு ‘சீ’ எடுத்தேன். இவரது தாய், தம்பியர், மனைவி என அனைவரும் என்மேல் அன்பு பாராட்டினார்கள்.

பின்னாளில் அரசியலில் புகுந்து இந்திய இராணுவக் காலத்தில் வடக்கு - கிழக்கின் முதலமைச்சரானார். பின் அரசியல் காற்றில் எங்கெங்கோ கொண்டு செல்லப்பட்டார். நீண்ட நாள்களின் பின் போர் முடிந்ததும், கொழும்பில் இவரை மீண்டும் சந்தித்தேன். உரையாடலின்போது தீர்க்க தரிசனமான அவரது தெளிவு ஆச்சரியப்படுத்தியது. இவரும் கழகத்தின் ஆரம்பப் பட்டிமண்டபங்களில் கலந்து கொண்டவர்.



சண்முகதாசிடம் விருது பெறும் தேவன், நடுவில் நந்தகுமார், சாம் சிவ குருக்கள், சோமசுந்தர தம்பிரான்.

**மூன்றாவது கம்பன் விழா [16.11.1980]**

இந்த விழா 1980 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் திகதி நடைபெற்றது. இதுவும் ஒருநாள் விழாவாகவே நடந்தது. இந்த விழாவை நடத்துவதற்கும், சுருவில் வர்த்தகரான ஏகாம்பரம் என்பவரே பொருளுதவி செய்தார். இந்த விழாவில் எங்கள் ஆசிரியரான வித்துவான் சி.ஆறுமுகம் அவர்களுக்குப் பட்டமளித்துப் பாராட்டினோம். வித்துவானின் விருப்பால், அவரின் குருநாதரும், எங்கள் ஆசிரியர் சிவராமலிங்கத்தின் சிறிய தந்தையுமான, சி.இ. சதாசிவம்பிள்ளை அவர்கள் இந்த விழாவுக்குத் தலைமை தாங்கினார். மிக வயதான அவரைத் தூக்கி வந்து மேடையேற்றினார்கள். தத்துவப் பேராசிரியர் வே.இராமகிருஷ்ணன், வித்துவான் பொன்.கனகசபை, புலவர் நா.சிவபாதசுந்தரம், வில்லிசைப் புலவர் திருப்பூங்குடி ஆறுமுகம், பொன். சுந்தரலிங்கம் போன்ற அறிஞர்கள், இந்த விழாவில் முதன்முதலாகக் கலந்துகொண்டனர். வித்துவான் தலைமையில் கவியரங்கம் நிகழ்ந்தது. அவ்விழாவில் வித்துவானுக்கு ஒரு பட்டத்தை அளிக்க விரும்பினோம். வித்துவான் தனக்கு ‘வரகவி’ எனும் பட்டத்தைத் தரவேண்டும் என விரும்ப, அதை மறுத்து அவருக்கு, ‘கவிச்செல்வர்’ என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தோம். வித்துவானின் செல்வாக்காலும், அவரது மருமகனான, பாடகர் பொன்.சுந்தரலிங்கத்தின் செல்வாக்காலும், சபையைப் புங்குடுதீவுக் கூட்டம் ஓரளவு நிறைத்தது. விழா அமைப்பில் வித்துவான் மூக்கை நுழைத்தமையால், அவ் விழாவில் கம்பனை ஓர் ஓரமாய்த் தான் நிறுத்த முடிந்தது.



பாராட்டுப்பெறும் வித்துவான் தம்பதியர்

(தொடரும்...)

காலைக்கதிர் Kalaikkathir







உடுவில் கல்விக் கோட்ட அதிபர் சங்கத்தின் பிரிவுபசார விழாஅண்மையில் புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலயத் தில் நடைபெற்றபோது ஓய்வு பெற்ற அதிபர் ஆ.சிறீதரன் அதிபர் சங்கத்தின் உபதலைவர் இரா. ஜெயக் குமாரால் மாலை அணிவித்துக் கௌரவிக்கப்படுகின்றமையையும்,

இடமாற்றம் பெற்ற அதிபர் நந்தீஸ்வரன் மற்றும் இடமாற்றம் பெற்ற பதிலதிபர்கள் திருமதி சண்முகனநாதன், திருமதி சி.சுகுமார், திருமதி வா.சச்சிதானந்தம், ஆகியோருக்கு பிரிவுபசார விழாநடை பெற்றபோது கோட்ட கல்வி அலுவலர் ரி.மாதவனுடன் காணப் படுகின்றனர். (இ)







யாழ்ப்பாணம், புதிய சோனக தெரு (ஜே/88) முதியோர் சங்கத்தின் முதியோர் தின விழா 2017 இன் போது விருந்தினர்கள் அழைத்து வரப் படுகின்றமையையும், யாழ்.பிரதேச செயலர் பொன்னம்பலம் தயானந்தன், முதியவர் ஒருவருக்கு பரிசு வழங்கி கௌரவிக்கின்றமை யையும் படங்களில் காணலாம். (இ)

உடுவில் மான்ஸ் த.க.பாடசாலையில் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு யாழ் பொதுநூலகத்தால் நடமாடும் நூலக சேவை நடைபெற்றபோது அதிபர் இரா.ஜெயக்குமார் மற்றும் ஆசிரியர்கள், நூலக ஊழியர்கள், மாணவர்கள் காணப்படுகின்றனர். (இ)




**வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 1 – 30**



# மருத்துவமரம் மருதமரம்

தமிழ் பெயர் - மருதமரம்
ஆங்கிலப் பெயர் - அர்யூன்
தாவரவியல்பெயர் - Terminaliaellipticawild.

மருதம் தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியா, நேபாளம், வங்காளதேசத்தில் அதிகம் காணப்படுகிறது.

இம் மரம் ஓங்கியுயர்ந்து வளரக்கூடியது. இந்த மரம் சாதாரணமாக ஏழு மீற்றர் சுற்றளவுடன் முப்பது மீற்றர் உயரம் வளரக் கூடியது. சங்க காலத்தில் இதன்சிறப்புக்கருதி 'திருமருது' எனப் போற்றினர். மருதமரம் நீர்ச்செழிப்புள்ள இடங்களான ஆற்றோரங்களிலும் வயலோரங்களிலும் செழித்துவளரும். மருத மரத்தில் வெண்மருது, கருமருது, பில்லமருது எனப் பல வகைகள் உண்டு. பில்லல மருது

> மரம் தான் மரம்தான்
> எல்லாம் மரம்தான்,
> மறந்தான் மறந்தான்
> மனிதன் மறந்தான்,
> மனிதன் மனிதனாக
> வேண்டுமா?
> மரத்திடம் வா...
> ஒவ்வொரு மரமும்
> போதிமரம்

வீட்டுக்கு நிலை, யன்னல் சட்டங்கள் என்பன செய்யப் பயன் படுகிறது.

மருத மரத்தைப் பயிரிட நேரடியாக விதைக்கலாம் அல்லது விதை நாற்றுக்கள் மூலம் பயிரிடலாம். இதன் இலைகளை பட்டுப்பூச்சி உணவாக உண்கிறது. மழைக் காலம் முடிந்ததும் இலைகள் சிவப்பு நிறமடைந்து உதிரும்.

முற்காலத்தில் கோவில் தேர்கள் செய்வதற்கு மருத மரத்தைப் பயன்படுத்தியுள்ளனர். அத்துடன், காடுகளில் மருத மர வளர்ச்சியைக் கொண்டு நீரூற்று இருப்பது கண்டறியப்படுகிறது. ஓங்கி வளர்ந்த மருத மரத்தின் அருகே ஆழத்தில் நீரூற்று இருக்கும் என நம்பப்படுகிறது. உவர் நிலத்தில் மருதமரத்தை வளர்த்தால் உவரின் கடுமை குறைந்துவிடும். நிறைய கிளைகள் இருக்கின்றமையால் தூசிக் காற்றிலுள்ள தூசியையும் வடிகட்டிக் கொடுத்திடும்.

எப்போதும் பசுமையாகக் காட்சியளிக்கும் மருத மரத்தை மருத்துவமரம் என்றே சொல்லலாம். மருதமரம் அளவற்ற மருத்துவ குணங்கள் கொண்டது. மருதம் பட்டையில் விற்ற மின் 'சி' மிகுதியாக காணப்படுகிறது.

மருதம் பட்டையைஅரைத்துப் பொடியாகவும் மருதம் பட்டையை தண்ணீரில் ஊற வைத்து குடிநீராகவும் பயன்படுத்தலாம். மருதம் பட்டை உடலுக்கு மிகுந்த குளிர்ச்சியைத் தருகிறது. அத்துடன், உடலில் இரத்தக் கொதிப்பு, இதய படபடப்பு, தூக்கமின்மை, நீரிழிவுப் பிரச்சினை, கல்லீரல் பிரச்சினை போன்றவைகளை அது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும்.



மருதங்காய்



மருதம் பூ

# சுற்றுலாத்துறையை மேம்படுத்தத் திட்டம்



கொழும்பு, நவ. 18

சுற்றுலாத்துறையை மேம்படுத்த பெரும்பான்மைத்திட்டங்களுக்கான முன் மொழிவுகள் 2018 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்தில் இடம் பெற்றுள்ளன.

அபிவிருத்தி அடைந்துவரும் சுற்றுலாத்துறையை மேம்படுத்த புதிய திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை 2020 ஆம் ஆண்டளவில் 45 லட்சமாக அதிகரிக்க இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இலங்கையின் இயற்கை அழகு, கலாசாரம், பாரம்பரிய உணவு வகை ஆகியவற்றை வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

சுற்றுலாத்துறையை மேம்படுத்த 50 கோடியே 65 லட்சம் ரூபா செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதிகரித்து வரும் சுற்றுலாத் துறையின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஹோட்டல்களின் அறைகளின் வசதிகள் விடுதிகள் ஆகியவற்றை விரிவுபடுத்த நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த திட்டத்தின் கீழ் வீடுகளில் தங்குமிட வசதிகளை ஏற்படுத்துவதற்கான வசதிகளை விரிவுப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறான வசதிகளை மேற்கொள்வதற்காக விசேட கடன் திட்டத்துக்காக ஒரு கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், மாத்தறை உள்ளிட்ட 6 துறைமுகங்களும், கற்பிட்டி தொல்பொருள் திணைக்களம் ஆகியவற்றை தனியார்த் துறையுடன் இணைந்து அபிவிருத்தி மேற்கொள்ள 25 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நானுஓயா, கொழும்பு கோட்டை, காலி, எல்ல ஆகிய ரயில் நிலையங்களில் பயணிகளுக்கான சிறந்தவசதிகளைச் செய்து கொடுப்பதுடன் இந்தப்பகுதிகளை தொல்பொருள் பகுதிகளாக அங்கீகரிக்கவும், இதன் பாரம்பரிய அடையாளங்களை முன்நிலைப்படுத்தி தனியார் துறையுடன் இணைந்த அபிவிருத்தியை மேற்கொள்ள 750 மில்லியன் ரூபா நிதி இந்தத் திட்டத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் விமானநிலையங்களான சிகிரிய, மட்டக்களப்பு சீனக்குடா, கொக்கல ஆகிய விமான நிலையங்கள் சுற்றுலாப்பயணிகளுக்கான விமான நிலையங்களாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

மாதுறுஓயா, கல்ஓயா, தேசிய பூங்காக்கள் ஆகியவற்றில் சுற்றுலாப்பயணிகளுக்கான சுற்றுலா வசதிக்காக 750 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இலங்கை சுதந்திரம் பெற்று 70 ஆண்டுகள் நிறைவடைவதை அடிப்படையாகக் கொண்டு லொஸ்ஏஞ்சல்ஸ், லண்டன், மும்பாய் முதலான நாடுகளில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்கில் வீதி விழாக்கள் கண்காட்சி முதலியன தனியார் துறையுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்படவுள்ளன.

இதற்காக 500 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பொருள்களை கொள்வனவு செய்யும் கேந்திர நிலையமாக அபிவிருத்தி செய்யும் நோக் கில் வெளிநாட்டு கடவுச் சீட்டை கொண்டுள்ளவர்களுக்கு விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களில் 2018 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதியில் இருந்து வற்வரியை மீள செலுத்தும் திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

SLTDA மற்றும் SLTPB என்ற நிறுவனம் இணைந்து Tourist Friendly tuk tuk என்ற vmhzvß RÌ tuk tuk வாகன சாரதிகள் பயிற்றுவிக்கப்படவுள்ளனர்.

வைத்தியசாலை தொழிற்துறையுடன் இணைந்து சுற்றுலாத்துறை வழிகாட்டிகளாக இவர்கள் பயிற்றுவிக்கப்படவுள்ளதுடன் இவர்கள் பணியகத்தில் பதிவு செய்யப்படவுள்ளனர். இதற்காக அரசு 500 கோடி ரூபா ஒதுக்கீடு செய்துள்ளது.

ஓட்டோ சாரதிகளுக்கான ஒழுங்குப்படுத்தல் அதிகாரசபை ஒன்று நியமிக்கப்படவுள்ளது. வாசிப்புமானி பொருத்துவதற்கான திட்டம் நடைமுறையில் உண்டு. இதனை அனைத்து ஓட்டோக்களும் வண்டியும் கடைப்பிடிக்க வேண்டும். இதற்காக 2 கோடியே 50 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஆவா குழுவின் 6 பேர் நேற்றுமுன்தினம் கைது

கொழும்பு, நவ. 18

யாழ்ப்பாணத்தில் பொலிஸாரின் விடுமுறைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன என பொலிஸ் ஊடகப்பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான சட்டத்தரணி ருவான் குணசேகர தெரிவித்தார்.




யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற தாக்குதல் மற்றும் சமூக விரோத செயற்பாடுகளால் ஆவா என்று அழைக்கப்படும் குழுவைச் சேர்ந்த 6 பேர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டிருந்தனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்ப்பாணம், மானிப்பாய் மற்றும் கோப்பாய் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த பொலிஸார் ஒன்றிணைந்து மேற்கொண்ட நடவடிக்கையின் போது சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

சமீபத்தில் இந்தச் சம்பவம் தொடர்பில் அந்தப் பகுதியில் 39 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களுள் 25 பேர் பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட 6 பேரில் பிணையில் விடுவிக்கப்பட்ட ஒருவரும் இருக்கின்றார் என்றும் சமீபத்தில் இடம்பெற்ற குற்றச் செயல்கள் தொடர்பில் 6 பேரை கைது செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவில் 6 பொலிஸ் நிலையங்களை சேர்ந்த பொலிஸாரின் விடுமுறை, வட பிராந்திய சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ரொசான் பெர்னாண்டோவின் உத்தரவுக்கு அமைவாக இரத்துச் செய்யப்பட்டிருக்கிறது என்றும் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பரீட்சைத் திணைக்கள பதில் ஆணையாளர் கடமை பொறுப்பேற்றார்!



கொழும்பு, நவ. 18

பரீட்சைதிணைக்களத்தின் பதில் ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ள பீ. சனத் பூஜித நேற்று முன்தினம் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

முன்னாள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ .எம் .என். ஜே புஸ்பகுமார கல்வி அமைச்சுக்கு இடமாற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தேசிய கல்வி நிறுவனத்தின் பரீட்சை ஆய்வாளராகவும் கல்வி அமைச்சின் ஆராய்ச்சி மற்றும்திட்டமிடல் பீடத்தின் பிரதி பணிப்பாளர் நாயகமாகவும் இதற்கு முன்னர் சேவையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் ஆவா கும்பல் மீண்டும் தலைதூக்க இடமளியேன்!

கொழும்பு, நவ. 18

வட மாகாணத்தில் செயற்படும் ஆவா எனப்படும் பாதாளக்கும்பலைக் கட்டுப்படுத்த அதிகபட்ச நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம் என சட்டம், ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்

இதுதொடர்பில் அவர்மேலும் கருத்துத் தெரிவித்தவை வருமாறு:-

வட மாகாணத்தில் செயற்படும் ஆவா எனப்படும் பாதாள கும்பல் மீண்டும் தமது நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களும் செய்திகளை வெளியிட்டிருந்தன. என்றாலும் எந்த வகையிலும் ஆவாகும்பலுக்கு மீண்டும் தலைதூக்க இடமளிக்கமாட்டேன் என நான் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த இரண்டு நாள்களில் இது தொடர்பான 8 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.



ஏனைய சந்தேக நபர்களை கைது செய்வதற்கான விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக யாழ்ப்பாணத்தில் பொலிஸாரின் விடுமுறைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

### சாகல ரத்நாயக்க கூறுகிறார்

யாழில் மத்திரமின்றி தெற்கில் செயற்படும் பாதாளக் கும்பல்களை கட்டுப்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் தற்போழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வெளிநாடுகளில் மறைந்திருந்து பாதாள உலகை இயக்கும் பாதாள உலகின் தலைவர்கள் மறைந்திருக்கும் இடங்களைக் கூட நாம் அடையாளம் கண்டுள்ளோம்.

அவர்களைக் கைது செய்து நாட்டுக்குக் கொண்டு வருவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(க)

# பேரறிவாளன் உள்ளிட்டோரை விடுதலை செய்ய மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்!

## தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்துகிறார்

சென்னை, நவ. 18

பேரறிவாளன் உள்ளிட்டோரை விடுதலை செய்யவதற்கான அனுமதியைப் பெறுவதற்கு போதிய அழுத்தத்தை மத்திய பா.ஜ.க. அரசுக்கு தமிழக அரசு கொடுக்க வேண்டும் என தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.



இது குறித்து தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற பேரறிவாளன் உள்ளிட்ட அனைவரும் தங்கள் வாழ்நாளில் பெரும் பகுதியைச் சிறையில் கழித்து விட்டனர்.

குறிப்பாக, பேரறிவாளன் மீதான குற்றச்சாட்டுகளை நிரூபித்த விதத்திலேயே சந்தேகங்களை எழுப்பி, அந்த வழக்கை விசாரித்த சி.பி.ஐ. விசாரணை அதிகாரியே உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

இந்த நிலையில், மேற்கண்டவர்களின் வழக்கில் தண்டனையை உறுதி செய்த உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி கே.டி.தோமஸ், அவர்களே சி.பி.ஐ., வழக்கை நிரூபித்த விடயத்தில் சந்தேகங்களை எழுப்பி, பேரறிவாளன் உள்ளிட்டோருக்கு கருணை காட்ட வேண்டும் என்று காங்கிரஸ் தலைவர் அன்னை சோனியா காந்திக்கு கடிதம் எழுதியிருக்கிறார்.

பேரறிவாளன் உள்ளிட்டவர்களின் விடுதலை, மாநில அ.தி.மு.க அரசு மத்திய அரசுடன் நடத்திய 'கௌரவப் போட்டி'யின் காரணமாக நிலுவையில் உள்ளது என்பது தெரிந்ததே.

இவர்களை விடுதலை செய்வதற்கான முடிவை எடுத்து விட்டு மத்திய அரசுக்கு 'கெடு' விதித்து அனுமதி கோரியமையால், மத்திய அரசின் சார்பில் அவசரமாக உயர் நீதிமன்றத்தை அணுகி அந்த விடுதலைக்குத் தடை ஏற்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், மத்திய புலனாய்வுத் துறை விசாரித்த வழக்கில் சம்பந்தப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்யும் முன்பு மத்திய அரசின் ஆலோசனையைக் கேட்க வேண்டும் என்று தீர்ப்பு வெளியிட்டுள்ள நிலையில், மீண்டும் தற்போதுள்ள மத்திய பா.ஜ.க., அரசுக்கு கடிதம் எழுதி அனுமதி ஏற்கனவே கோரியிருக்கிறது அ.தி.மு.க. அரசு.

ஆனால், அந்த அனுமதியைப் பெறுவதற்கு எவ்வித தொடர் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல் அ.தி.மு.க. அரசு மௌனமாக இருப்பதால், பேரறிவாளன் உள்ளிட்டோர் விடுதலையாக முடியவில்லை.

இதுபோன்ற சூழ்நிலையில்தான் உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி, அதுவும் மேல்முறையீட்டில் தண்டனையை உறுதி செய்த நீதிபதியே சம்பந்தப்பட்டவர்களுக்கு கருணை காட்ட வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருக்கிறார்.

உயர்நீதிமன்றத்தில் விசாரணை அதிகாரியான தியாகராஜன் தாக்கல் செய்துள்ள மனு, உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி வெளியிட்டுள்ள கருத்து ஆகியவற்றின் அடிப்படையில் அ.தி.மு.க. அரசு இனியும் கால தாமதம் செய்யாமல் பேரறிவாளன்



உள்ளிட்டோரின் விடுதலைக்கான அனுமதியை மீண்டும் பெற மத்திய அரசை உடனடியாக அணுக வேண்டும்.

ஏற்கனவே, தமிழக அரசு கேட்டுள்ள அனுமதியை பெற்று பேரறிவாளன் உள்ளிட்டோரை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வழக்கில் குற்றம் சாட்டப்பட்டோர் தண்டிக்கப்பட்ட நேரத்தில் இருந்த சூழலும், இப்போது அதே வழக்கை விசாரித்த அதிகாரி, தண்டித்த நீதிபதி தெரிவித்த கருத்துகளுக்குப் பிறகு ஏற்பட்டுள்ள சூழலும் அடிப்படையில் மாறுகிறது என்பதை கவனத்தில் எடுத்துக் கொண்டு பேரறிவாளன் உள்ளிட்டோரை விடுதலை செய்வதற்கான அனுமதியை உடனடியாக வழங்க மத்திய அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

'மத்திய அரசுடன் சுமூக உறவு வைத்திருக்கிறோம்' என்று தம்பட்டம் அடித்துக் கொள்ளும் தமிழக அரசு பேரறிவாளன் உள்ளிட்டோரை விடுதலை செய்வதற்கான அனுமதியைப் பெறுவதற்கு போதிய அழுத்தத்தை மத்திய பா.ஜ.க., அரசுக்கு கொடுக்க வேண்டும் என்றும், ஏற்கனவே இருந்த தலைமை செயலாளர்கள் மத்திய அரசுக்கு இது தொடர்பாக எழுதிய கடிதங்களின் மீது தொடர் நடவடிக்கையைத் தனி கவனத்துடன் தலைமைச் செயலாளர் எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

மகள் திருமணத்துக்க 6 மாத பரோல்:

## நளினியின் மனுவை தள்ளுபடி செய்க!

சென்னை, நவ. 18

மகள் திருமண ஏற்பாடுகளுக்காகத் தனக்கு 6 மாதங்கள் விடுப்பு வழங்க வேண்டும் என்று கோரும் நளினியின் மனுவைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு பதில் மனுத் தாக்கல் செய்துள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் நளினி ஆயுள் தண்டனை பெற்று கடந்த 26 ஆண்டுகளாக வேலூர் சிறையில் இருந்து வருகிறார்.

ஆயுள் தண்டனை பெற்று 20 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் இருப்பவர்களை விடுதலை செய்யலாம் என்று தமிழக அரசு 1994 ஆம் ஆண்டு பிறப்பித்த உத்தரவின்படி, தன்னை முன்கூட்டியே விடுவிக்க உத்தரவிடக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் அவர் தொடர்ந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்த நிலையில், லண்டனில் உள்ள தனது மகள் அரித்ராவின் திருமண ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக 6 மாதங்கள் பரோல் வழங்கக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் நளினி மனுத் தாக்கல் செய்தார்.

இந்த மனுவுக்கு பதிலளிக் கும்படி அரசுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில் இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

அப்போது தமிழக அரசு தரப்பில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில், நளினிக்கு பரோல் வழங்கினால் சட்டத்தின்பிடியில் இருந்து அவர் தப்பிக்கக்கூடும். எனவே, அவரது பரோல் மனுவைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று அரசு தனது பதில் மனுவில் கூறியுள்ளது.

---

# பேரறிவாளனை விடுதலை செய்ய மத்திய அரசு இணங்க வேண்டும்

சென்னை, நவ. 18

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் பல உண்மைகள் வெளிவந்துள்ள நிலையில், பேரறிவாளனை விடுதலை செய்யத் தங்களுக்கு விருப்பம் என உயர் நீதிமன்றத்தில் மத்திய அரசு தெரிவிக்க வேண்டும் என அவரின் தாய் அற்புதம்மாள் கோரிக்கை விடுத்துள்ளார்.



ராஜீவ் காந்தி கொலை வழக்கை விசாரித்த சிபிஐ அதிகாரியின் ஒப்புதல் வாக்குமூலத்தை ஏற்றுள்ள உயர் நீதிமன்றம், பேரறிவாளனைத் தண்டனையில் இருந்து விடுவிப்பது தொடர்பாக மத்திய அரசு 2 வாரத்தில் முடிவெடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது.

மேலும், பேரறிவாளனை விடுவிப்பது தொடர்பாக அந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதிகளில் ஒருவரான கே.டி. தோமஸ் கடந்த ஒக்ரோபர் மாதம் 18 ஆம் திகதி காங்கிரஸ் தலைவர் சோனியா காந்திக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

அதில், தாங்களும், தங்கள் மகன் ராகுல், மகள் பிரியங்காவும் குடியரசுத்தலைவருக்கு கோரிக்கை வைக்கும் பட்சத்தில் நீண்ட காலம் சிறையில் கழித்துவிட்ட சிறைவாசிகளை மத்திய அரசு விடுதலை செய்ய வாய்ப்புள்ளது.

மனிதநேய அடிப்படையில் இந்த வழக்கில் தாங்கள் ஒருவரால்தான் இந்த பேருதவியை செய்ய முடியும் என்று தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், அற்புதம்மாள் சென்னையில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் தெரிவித்தவை வருமாறு:-

வாக்குமூலம் பெற்ற அதிகாரியே பேரறிவாளன் கூறியதை நான் பதிவு செய்யவில்லை என ஒப்புக்கொண்டுள்ளார். உண்மைகள் வெளிவந்துள்ள பிறகும் பேரறிவாளன் சிறைக்குள் இருக்கின்றமை கொடுமையானது.

எனவே, எனது மகனை உடனே விடுதலை செய்ய வேண்டும்.

**அற்புதம்மாள் வேண்டுகோள்**

கடந்த 1999 ஆம் ஆண்டே காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தியைச் சந்திக்க முயற்சித்தேன்.

ஆனால், அது நடக்கவில்லை. தற்போதுள்ள சூழலில் அவரை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தால் எங்கள் தரப்பு நியாயத்தை அவரிடம் எடுத்து உரைப்பேன்.

உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி கே.டி.தாமஸ் அந்த வழக்கில் உள்ள குளறுபடிகளை வெளிப்படுத்தியுள்ளார். அவருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir



# ஜப்பானில் 20 வினாடிகளுக்கு முன்னதாகவே புறப்பட்ட ரயில்


மன்னிப்புக் கோரிய ரயில்வே நிர்வாகம்

பீஜிங், நவ. 18

ஜப்பான் நாட்டில் ரயில் ஒன்று வழக்கமாகப் புறப்பட வேண்டிய நேரத்தில் இருந்து 20 வினாடிகளுக்கு முன்னதாகவே புறப்பட்டுச் சென்றதைத் தொடர்ந்து அந்த ரயிலை இயக்கும் ரயில்வே நிர்வாகம் மன்னிப்புக் கோரியுள்ளது.

ஜப்பான் நாடு நேரம் தவறாமைக்கும், அந்நாட்டு மக்கள் பணிவுக்கும் பெயர் பெற்றவர்கள் என்பது அனைவரும் அறிந்ததே.

இந்நிலையில், குறிப்பிட்ட நேரத்திலிருந்து வெறும் 20 வினாடிகளுக்கு முன்னதாகவே ஒரு ரயில் புறப்பட்டுச் சென்றதற்காக அந்த ரயில்வே நிர்வாகம் மன்னிப்பு கோரியிருப்பது பரவலாக பேசப்பட்டு வருகிறது. இது பல்வேறு ஊடகங்களிலும் செய்தியாகியுள்ளது.

### இராணுவ புரட்சியை அடுத்து

## ஸிம்பாப்வேயில் இடைக்கால அரசு அமைக்க முயற்சி

**ஹராரே 'புளூ ஹவுஸில்' முகாபே சிறை**

ஹராரே, நவ. 18

ஸிம்பாப்வே ஆட்சியை இராணுவம் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த நிலையில், இடைக்கால அரசு அமைப்பது குறித்து சமரச பேச்சு நடைபெற்று வருகிறது.

ஸிம்பாப்வேக்கு 1980 ஆம் ஆண்டில் சுதந்திரம் கிடைத்தது. அதன் பிறகு அந்த நாட்டை ரொபர்ட் முகாபே (வயது - 93) தொடர்ந்து ஆட்சி செய்து வருகிறார். இந்த நிலையில், துணை அதிபர் எம்மர்சன் நங்கக்வா அடுத்த அதிபராவதற்கான வாய்ப்பு இருந்தது.

ஆனால், தனது மனைவி கிரேஸை (வயது - 52) அடுத்த அதிபராக்கும் நோக்கத்தில் எம்மர்சனை முகாபே பதவி நீக்கம் செய்தார். இதற்கு இராணுவத் தளபதி கான்ஸ்டன் டினோ சிவெங்கா கடும் எதிர்ப்புத் தெரிவித்தார்.



இந்த நிலையில்தான், அந்த நாட்டு இராணுவம் தலைநகர் ஹராரேயை கடந்த புதன்கிழமை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது.

குறிப்பாக அரசு அலுவலகங்கள், அரசு தொலைக்காட்சி ஆகியவை இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் வந்தன. முகாபே ஹராரேயில் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார் எனவும் தகவல் வெளியானது.

இதன்மூலம் இராணுவ ஆட்சியைக் கைப்பற்ற முயற்சிப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால், இதை மறுத்த இராணுவம், அதிபருடன் இருந்து கொண்டு குற்றச் செயலில் ஈடுபட்டவர்களை குறிவைத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் விரைவில் சகஜநிலை திரும்பும் என்றும் தெரிவித்திருந்தது.

இதனிடையே, கத்தோலிக்க மதகுருவான பிடலிஸ் முகோனோரி, ராபர்ட் முகாபே மற்றும் ராணுவ உயர் அதிகாரிகளுக்கு இடையே சமரசம் செய்துவைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

ஆனால், பேச்சின் விவரம் தெரியவில்லை. அதேநேரம், முகாபேவை பதவி விலகுமாறு இராணுவம் வலியுறுத்தி வருகிறது எனக் கூறப்படுகிறது. ஆனால், அதை முகாபே ஏற்க மறுத்துவிட்டார் என்றும் கூறப்படுகிறது.

ஹராரே நகரில் உள்ள 'புளூ ஹவுஸ்' இல்லத்தில் முகாபே, அவரது மனைவி கிரேஸ் மற்றும் 2 மூத்த அமைச்சர்கள் சிறை வைக்கப்பட்டுள்ளனர் என்ற தகவல் வெளியாகி உள்ளது.

இதனிடையே, வெளிநாட்டில் புற்று நோய்க்காக சிகிச்சை பெற்று வந்த முக்கிய எதிர்க்கட்சித் தலைவர் மோர்கன் வங்கிரை நாடு திரும்பி உள்ளார்.

இதையடுத்து, எதிர்க்கட்சியை உள்ளடக்கிய இடைக்கால அரசு அமைப்பது தொடர்பாக இராணுவத்துடன் பேச்சு நடைபெற்று வருகிறது என மோர்கன் கட்சியின் மூத்த நிர்வாகி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# தற்கொலைத் தாக்கு; காபூலில் 18 பேர் பலி



காபூல், நவ. 18

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 18 பேர் பலியாகினர்; பலர் படுகாயமடைந்தனர்.

ஆப்கானிஸ்தானின் வடக்குப் பகுதியில் உள்ள பால்க் மாகாணத்தின் ஆளுநர் அட்டா முகமது நூர். இவர் அந்த நாட்டு அரசியலில் செல்வாக்கு மிகுந்தவர். தற்போதைய அதிபர் அஷ்ரப் கனியைத் தொடர்ந்து விமர்சித்து வருகிறார்.


இந்த நிலையில், அட்டாவின் ஆதரவாளர்கள் காபூலில் நேற்று கூடி முக்கிய ஆலோசனை நடத்தினர்.

இதில் 700இற்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். அப்போது தற்கொலைப்படை தீவிரவாதி கூட்டத்தில் நுழைய முற்பட்டார். அவரது நடவடிக்கையில் சந்தேகமடைந்த பொலிஸ்காரர் அவரை தடுத்து நிறுத்தினார். அப்போது அந்தத் தீவிரவாதி வெடித்துச் சிதறினார். இதில் 8 பொலிஸார் உட்பட 18 பேர் பலியாகினர். 10 இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

இந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ். தீவிரவாதிகள் பொறுப்பேற்றுள்ளனர். அண்மைகாலமாக ஆப்கானிஸ்தானில் ஐ.எஸ். அமைப்பின் ஆதிக்கம் அதிகரித்து வருகிறது. அந்த அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதிகள், ஷியா முஸ்லிம்கள், பாதுகாப்புப் படையினர் மற்றும் செய்தியாளர்களை குறிவைத்து அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதனால் ஆப்கானிஸ்தான் உள்நாட்டுப் போர் மேலும் சிக்கலாகியுள்ளது.

ஆப்கானிஸ்தானில் 56.8 சதவீத பகுதி மட்டுமே அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது. மீதமுள்ளவற்றில் 13.2 சதவீத பகுதி தலிபான்களிடமும் 30 சதவீத பகுதி உள்ளூர் தலைவர்களின் கட்டுப்பாட்டிலும் உள்ளன.

# பாக்.தீவிரவாதிகளுக்கு புகலிடம் அளிப்பதை ட்ரம்ப் நிர்வாகம் பொறுத்துக் கொள்ளாதாம்



பாகிஸ்தான் தீவிரவாதிகளுக்கு புகலிடம் அளிப்பதை ட்ரம்ப் நிர்வாகம் பொறுத்துக் கொள்ளாது என்று அமெரிக்கா கூறியுள்ளது.

இதுகுறித்து கருத்தரங்கத்தில் அமெரிக்கப் பாதுகாப்புக் கொள்கைச்செயலாளர் கூறும்போது-

பாகிஸ்தான் தீவிரவாதிகளுக்கு புகலிடம் அளிப்பதை ட்ரம்ப் நிர்வாகம் பொறுத்துக் கொள்ளாது.

ஆப்கானிஸ்தானில் ஐஎஸ் தீவிரவாதிகள் மற்றும் தலிபான்களுக்கு எதிராக நாங்கள் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் பாகிஸ்தானில் செயல் பெரும் குறைப்பாடாக உள்ளது. இதுவரை ஆப்கானிஸ்தானில் தீவிரவாதத் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட 2,000 அமெரிக்கப் படை வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் மற்றுமொரு பாதுகாப்புத் துறை அதிகாரி தெரிவித்தவை வருமாறு:-

பாகிஸ்தானுடன் ஐ.எஸ். தீவிரவாதிகள், அல் குவைதா போன்ற தீவிரவாத அமைப்புகளைத் தோற்கடிப்பது உள்ளிட்ட பரஸ்பர நலன்களை முன்னெடுத்துச் செல்வதற்கு அமெரிக்கா ஓர் ஆக்கபூர்வமான உறவை மேற்கொண்டு வருகிறது. ஆனால், பாகிஸ்தான் நேர்மறையாக அணுசக்தி திட்டத்தை விரிவுபடுத்துவது மற்றும் அதன் பிராந்தியத்தில் தீவிரவாதக் குழுக்களுக்குப் புகலிடம் அளிப்பது போன்ற செயல்களில் ஈடுபட்டு வருகிறது. பாகிஸ்தானின் நலன்களில் நாங்கள் தீவிர அக்கறை கொண்டுள்ளோம் என்றும் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, பாகிஸ்தானின் உளவுத்துறை அமைப்பு தீவிரவாதிகளுடன் தொடர்பு கொண்டுள்ளது என்பது எனக்குத் தெளிவாக விளங்குகிறது.

பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. அரசாங்கம் வகுத்த வெளியுறவு கொள்கைகளின் படி இயங்காமல் தனக்கென தனியாக வெளியுறவுக் கொள்கைகளைவகுத்துஇயங்குகிறது என்று அமெரிக்கா குற்றஞ் சாட்டிவருவது குறிப்பிடத்தக்கது.



# ஹத்துருசிங்கவை அன்புடன் வரவேற்கிறோம்

## அமைச்சர் தயாசிறி தெரிவிப்பு

கொழும்பு, நவ. 18

இலங்கை அணியின் முன்னாள் டெஸ்ட் வீரரும், பங்களாதேஷ் அணியின் முன்னாள் பயிற்றுவிப்பாளருமான சந்திக்க ஹத்துருசிங்கவை இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக நியமிக்க ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதாகவும், அதற்கான அழைப்பை அவர் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டுள்ளமையால் அவரை நாட்டுக்கு மீண்டும் அன்புடனும், கௌரவத்துடனும் வரவேற்பதாக விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

சந்திக்க ஹத்துருசிங்க பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளர் பதவியிலிருந்து விலகி இலங்கை அணிக்கு வருவது தொடர்பில் அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பின்போது எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போது விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பிரச்சினைகளை ஏற்படுத்தாது தயவுசெய்து அவரை இந்நாட்டின் கிரிக்கெட்டைக் கட்டியெழுப்புவதற்கு உதவ முன்வாருங்கள். நாங்கள் ஒரு சிறந்த பணியை இதற்காக மேற்கொள்கின்றோம்.

எனினும், தற்போது அவர் இராஜினாமா கடிதத்தை அந்நாட்டு கிரிக்கெட் சபைக்கு கையளித்துள்ளார். எனினும், அவர் எம்முடன் இணைந்துகொண்டால் அவரது பயிற்றுவிப்பின் கீழ் நாம் சந்திக்கவுள்ள முதல் அணியாக பங்களாதேஷ் திகழும்.

அத்துடன் ஹத்துருசிங்கவுடன் சில காலம் பணிபுரிந்த திலான் சமரவீர தற்போது எமது அணியுடன் இணைந்துகொண்டார். எனவே, அடுத்த நடவடிக்கையாக ஹத்துருசிங்கவும் எம்முடன் இணைவார் எனத் தெரிவித்தார்.

பங்களாதேஷ் அணியின் பயிற்றுவிப்பாளராக வருடமொன்றுக்கு 40 ஆயிரம் அமெரிக்க டொலர்களை (61 லட்சம் ரூபா) வேதனமாகப் பெற்றுக்கொண்டிருக்கின்ற ஹத்துருசிங்க, அவ்வளவு பெரிய வேதனத்தை உதரித் தள்ளிவிட்டு நாட்டுக்காகவும், எமது வீரர்களுக்காகவும் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் இந்த தீர்மானத்தை மேற்கொண்டமை குறித்து நாம் அவருக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அப்படியென்றால் ஹத்துருசிங்கவுக்கு இந்தப் பதவியை ஏற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டதா என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், ஆம் நாம் அவருக்கு அழைப்பு விடுத்தோம்.

நாங்கள் மிகவும் நல்ல காரியமொன்றை செய்யவுள்ளோம். அது மட்டுமல்லாமல், இப்பதவியை அவர் ஏற்றுக்கொண்ட பிறகு, இலங்கை அணியின் அடுத்த சுற்றுப்பயணம் பங்களாதேஷ் அணியுடன் இடம்பெறவுள்ளது.

இதனால் அவருக்கு இன்னும் நெருக்கடிகளுக்கு முகங் கொடுக்க நேரிடும். எனினும் எமது முயற்சி வெற்றியளிக்கும். அவர் 2019 வரை பங்களாதேஷ் அணியுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார்.

எனினும் அந்த நாட்டு கிரிக்கெட் சபையுடன் நிலவிய கருத்து முரண்பாடுகளால் அந்தப் பதவியை இராஜினாமா செய்யத் தீர்மானித்துள்ளார்.

எனவே, அவர் அந்நாட்டு கிரிக்கெட் சபையுடன் இறுதிக் கட்ட பேச்சு ஒன்றை மேற்கொள்ளவுள்ளார். அதன்பிறகு அவரது நியமனம் பற்றி உறுதியாக அறிவிக்க முடியும். அதனால் தற்போது அவருடைய வருகை பற்றி சொல்வது பொருத்தமில்லை.

ஆனால், இவ்வாறு அனைத்தையும் கூறுவதற்கு இது சரியான நேரம் என நான் கருதவில்லை. எனினும், திலானும் தற்போது எம்முடன் உள்ளார். அவரும் இலங்கை அணியின் முன்னாள் வீரர்தான்.

எனினும், ஹத்துருசிங்கவை இலங்கை அணியின் பயிற்சியாளர் பதவியிலிருந்து வெளியேற்றியது கிரிக்கெட் பற்றி அதிகம் பேசுகின்ற கிரிக்கெட்டை ஆட்சி செய்தவர்களின் காலப்பகுதியில் தான் என்பது பற்றி நாம் நன்கு அறிவோம்.

ஒரு சிறந்த பயிற்சியாளராக அவரை வெளியேற்றியது உண்மையில் கவலையளிக்கிறது. எனினும், பங்களாதேஷ் அணியை ஒரு முன்னணி அணியாக கொண்டு வந்த பெருமை ஹத்துருசிங்கவை சாரும்.

எனவே 2019 வரை இலங்கை அணியின் பயிற்சியாளராக பணியாற்றும்படி நாம் அவரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தோம். அந்த அழைப்பை ஏற்றுக்கொண்ட அவர், பணத்துக்காக அல்லாமல் நாட்டுக்காக சேவையாற்ற விரும்புவதாகவும் தெரிவித்ததாக அமைச்சர் இதன்போது தெளிவுபடுத்தினார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக சந்திக்க ஹத்துருசிங்கவை நியமிக்க ஆவலுடன் எதிர்பார்த்துள்ளோம். அதற்கான அழைப்பை அவர் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டுள்ளமையால் அவரை நாட்டுக்கு மீண்டும் அன்புடனும், கௌரவத்துடனும் வரவேற்கின்றோம். அவருக்கான அனைத்து ஒத்துழைப்புக்களையும் வழங்குவதற்கு நாங்கள் தயாராகவுள்ளோம் என விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர மேலும் தெரிவித்தார்.

இந்நிலையில், ஹத்துருசிங்க பங்களாதேஷ் அணியின் பயிற்றுவிப்பாளர் பதவியிலிருந்து விலகுவதாக கடந்த வாரம் உத்தியோகபூர்வமாக அறிவித்ததைத் தொடர்ந்து பங்களாதேஷ் கிரிக்கெட் சபை மற்றும் அந்த நாட்டு வீரர்கள் மிகப் பெரிய நெருக்கடிகளுக்கும், மன உளைச்சலுக்கும் ஆளாகியுள்ளனர்.



எனினும், எதிர்வரும் 2019ஆம் ஆண்டு வரை ஹத்துருசிங்கவின் ஒப்பந்தக்காலம் உள்ள நிலையில், ஹத்துருசிங்கவுடன் இதுதொடர்பில் பேச்சுவார்த்தையொன்றை நடத்தவும், அதன்மூலம் அவரை எப்படியாவது தக்கவைத்துக் கொள்ளவும் அந்நாட்டு கிரிக்கெட் சபை அதிகாரிகள் இரவு பகலாக முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இந்த நிலையில், இவ்வாரத்துக்குள் ஹத்துருசிங்கவை சந்திக்கவுள்ள அந்த நாட்டு கிரிக்கெட் சபை அதிகாரிகள், அவரது பணியை தொடருமாறு வினவவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளர் பதவியிலிருந்து சந்திக்க ஹத்துருசிங்க இராஜினாமா செய்யவுள்ளார் என கடந்த 9ஆம் திகதி ஊடகங்கள் வாயிலாக செய்திகள் வெளியாகியிருந்தன.

எனினும், அவரது இராஜினாமாவைப் பங்களாதேஷ் கிரிக்கெட் சபை ஏற்றுக்கொள்ளவில்லை எனவும், அவரது இராஜினாமாவுக்கான காரணத்தை அறிவிக்கவில்லை எனவும் பங்களாதேஷ் கிரிக்கெட் சபை தெரிவித்திருந்தது.

எனினும், இந்தச் செய்தி வெளியான மறுதினம், ஹத்துருசிங்கவின் பதவி விலகலை அந்நாட்டு கிரிக்கெட் சபையின் தலைவர் நஸ்முல் ஹசன் உறுதிப்படுத்தினார்.

அவர் இதற்கு முன்னர் ஒரு தடவை தனது இராஜினாமா கடிதத்தை கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் சமர்ப்பித்த போதிலும் பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அதனை ஏற்க மறுத்துவிட்டது. குறித்த இராஜினாமாக் கடிதத்தில் தனக்கு தொடர்ந்தும் அணியின் பயிற்றுவிப்பாளர் பதவியை தொடர விரும்பவில்லை என்றும் தெரிவித்திருந்தார்.

ஆயினும், பதவி விலகுவதற்கான எந்தவொரு முறையான காரணத்தையும் அவர் தெரிவிக்கவில்லை என அந்நாட்டு கிரிக்கெட் சபையின் தலைவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இலங்கை கிரிக்கெட் வட்டாரங்கள் ஊடாக வெளியான செய்திகளின்படி, இந்திய தொடரை அடுத்து சந்திக்க ஹத்துருசிங்க இலங்கை அணியின் புதிய பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்படுவார் என தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

கடந்த 7 வருடங்களில் 10 பேர் இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளராகச் செயற்பட்டுள்ளமையுடன், ஹத்துருசிங்கவும் இணைந்துகொண்டால் அவர் குறித்த காலத்தில் இணையும் இலங்கை அணியின் 11ஆவது பயிற்சியாளராக பொறுப்பேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை அணிக்காக 26 டெஸ்ட் போட்டிகளிலும், 35 ஒரு நாள் போட்டிகளிலும் விளையாடியுள்ள 49 வயதான ஹத்துருசிங்க, 2010ஆம் ஆண்டு இலங்கை அணியின் உதவி பயிற்றுவிப்பாளராகவும், அதனைத் தொடர்ந்து ஆஸ்திரேலியாவின் நியூ சவுத்வேல்ஸ் அணியின் பயிற்றுவிப்பாளராகவும் கடமையாற்றினார். அதன்பிறகு 2014ஆம் ஆண்டு பங்களாதேஷ் அணியின் பிரதான பயிற்சியாளராக பொறுப்பேற்ற அவர், அவ்வணியை 2015 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் கால் இறுதி வரையும், 2017 சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளில் அரை இறுதி வரையும் கொண்டு சென்றார்.

அத்துடன், பங்களாதேஷ் தனது சொந்த மண்ணில் நடைபெற்ற இரு தரப்புச் சர்வதேச ஒருநாள் தொடர்களில் இந்தியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளை வெற்றி கொண்டது.

அது மட்டுமல்லாமல் டெஸ்ட் அரங்கில் இங்கிலாந்து, ஆஸ்திரேலியா ஆகிய அணிகளை தனது சொந்த மண்ணில் வெற்றி கொண்டு வரலாறு படைத்த பங்களாதேஷ், அந்நிய மண்ணில் இலங்கையை வெற்றி கொண்ட பெருமையையும் பெற்றுக் கொண்டது.

எவ்வாறாயினும் தென்னாபிரிக்காவுக்கான அண்மைய கிரிக்கெட் விஜயத்தில் மூவகைத் தொடர்களிலும் பங்களாதேஷுக்கு தோல்விகளே மிஞ்சின. இதன் பின்னணியில் ஹத்துருசிங்க இராஜினாமா செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க)

# உலகக்கிண்ண உதைபந்துத்தொடர்: பெரு 32 ஆவது அணியாகத் தகுதி

லிமா, நவ. 18

உலகக் கோப்பை உதை பந்து தொடரில் (2018) பங்கேற்கும் கடைசி மற்றும் 32 ஆவது அணியாக பெரு தகுதி பெற்றது.

ரஷ்யாவில் அடுத்த ஆண்டு (ஜூன் 14- ஜூலை 15) ‘பிபா’ உலக கோப்பை உதை பந்து தொடர் நடக்கவுள்ளது.

இதில் ரஷ்யா (தொடரை நடத்தும் நாடு), இங்கிலாந்து, ஜப்பான் உள்ளிட்ட 31 அணிகள் பிரதான சுற்றுக்கு முன்னேறி இருந்தன.

பெரு தலைநகர் லிமாவில் கடைசி தகுதிச்சுற்றுப்போட்டி நடந்தது. இதில் ஓசியானா-தென் அமெரிக்கா அணிகளுக்கு இடையிலான ‘பிளே-ஆப்’ இரண்டாவது போட்டியில் பெரு, நியூஸிலாந்து அணிகள் மோதின.

இரு அணிகள் மோதிய முதல் போட்டி (0:0) சமநிலை ஆனதால், இதில் வெல்லும் அணிக்கு உலக கோப்பை வாய்ப்பு என்ற நிலை இருந்தது.



பெரு சார்பில் ஜெபர்சன் (28வது நிமிடம்), கிறிஸ்டியன் ரமாஸ் (65) தலா ஒரு கோல் அடித்தனர். நியூஸிலாந்து தரப்பில் யாரும் கோல் அடிக்கவில்லை. முடிவில் பெரு அணி 2:0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

இதன் மூலம், 36 ஆண்டுக் குப்பின் உலக கோப்பைக்கு தகுதி பெற்றது. கடைசியாக 1982 இல் ஸ்பெயினில் நடந்த தொடரில் பெரு விளையாடி இருந்தது. தவிர, இம்முறை கடைசி மற்றும் 32ஆவது அணியாக ரஷ்யாவில் நடக்கவுள்ள தொடருக்கு தகுதி பெற்றது.

**32 அணிகள்**

உலக கோப்பை தொடரின் தகுதிச்சுற்று போட்டிகள் கடந்த 2015, மார்ச் முதல் நடந்தன. இதன் கடைசி தகுதிச்சுற்று போட்டி முடிந்த நிலையில் 32 அணிகள் தகுதி பெற்றன.

இதன் விவரம்:-

**ஆசியா**

தென் கொரியா, சவுதி அரேபியா, ஜப்பான், ஈரான், ஆஸ்திரேலியா வடக்கு மத்திய அமெரிக்கா, கரீபிய அமைப்பு (‘கன்காகப்’) கோஸ்டாரிகா, மெக்சிக்கோ, பனாமா

**ஆபிரிக்கா**

எகிப்து, மொராக்கோ, நைஜீரியா, செனகல், துனிசியா

**தென் அமெரிக்கா**

ஆர்ஜென்டினா, பிரேசில், கொலம்பியா, பெரு, உருகுவே

**ஐரோப்பா**

ரஷ்யா, பெல்ஜியம், குரோஷியா, டென்மார்க், இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, ஐஸ்லாந்து, போலந்து, போர்ச்சுகல், செர்பியா, ஸ்பெயின், சுவீடன், சுவிற்ஸர்லாந்து.

(க)

## கைக்குழந்தையுடன் காதலரை மணந்தார் செரீனா வில்லியம்ஸ்!



நியூயோர்க், நவ. 18

அமெரிக்க டென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் தனது காதலரான அலெக்சிஸ் ஓகானியனை நேற்று முன்தினம் திருமணம் செய்துள்ளார்.

அமெரிக்காவின் பிரபல டென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் ஆவார். இவருக்கும், ரெட்டிட் நிறுவனத்தின் துணை நிறுவுநரான அலெக்சிஸ் ஓகானிய னுக்கும் கடந்த ஆண்டு டிசெம்பரில் திருமண நிச்சயதார்த்தம் நடந்தது.

அதனைத் தொடர்ந்து, டென்னிஸ் வாழ்விலிருந்து விலகி இருந்த செரீனா, தான் கர்ப்பமாக இருக்கிறார் என அறிவித்தார். பின்னர், கடந்த செப்ரெம்பர் முதலாம் திகதி அவருக்கு பெண் குழந்தை பிறந்தது.

இந்நிலையில், கைக்குழந்தையுடன் செரீனா மற்றும் ஓகானியனின் திருமண விழா நேற்றுமுன்தினம் அமெரிக்காவின் நியூ ஆர்லியன்ஸில் கோலாகலமாக நடந்தது. மிகவும் நெருக்கமானவர்களுக்கு மட்டுமே திருமண அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

36 வயதாகும் செரீனா, 23 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார். கடைசியாக அவர், கடந்த ஜனவரி மாதம் ஆஸ்திரேலிய ஓபன் பட்டத்தை வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் சர்ச்சையில் சிக்கினார் கோஹ்லி!



விராட் கோஹ்லி சிறந்த துடுப்பாட்ட வீரராக பல்வேறு சாதனைகள் படைத்து வந்தாலும், அவ்வப்போது சர்ச்சைகளில் சிக்குகிறார்.

கொல்கத்தாவில் நேற்று முன்தினம் இலங்கை அணிக்கு எதிராக டெஸ்ட் போட்டி நடந்தது.

ஆட்டம் ஆரம்பமாவதற்கு முன், தேசிய கீதம் ஒலிக்கப்பட்டது. அப்போது, இந்திய அணித்தலைவர் விராட் கோஹ்லி சுவிங்கத்தை மென்றவாறே தேசிய கீதம் பாடியுள்ளார்.

இந்த விடயம் தற்போது சமூக வலைதளங்களில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு முன்பும், இதேபோல இந்திய அணி வீரர் பர்வேஷ் ரசூல், கடந்த ஜனவரி மாதம் இங்கிலாந்து அணிக்கு எதிரான டி20 போட்டியின் போது சுவிங்கம் மென்றமைசர்ச்சையானது குறிப்பிடத்தக்கது.



## இளையோர் ஒலிம்பிக் தகுதிகாணல்; 17 வயதின்கீழ் இலங்கை மகளிர் அணி

கொழும்பு, நவ. 18

இலங்கை ரக்பி சம்மேளனம் (SLR) 17 வயதுக்குட்பட்ட இலங்கை மகளிர் ரக்பி அணியை ஆசிய எழுவர் ரக்பி (17 வயதுக்குட்பட்ட மகளிருக்கான) தொடரில் பங்கெடுக்க வைப்பதன் மூலம், இதோடு சேர்த்து அடுத்த வருடத்திற்கான இளையோர் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளுக்குரிய தகுதிகாண் ஆட்டத்திலும் விளையாட வைக்கின்றது.

ஒலிம்பிக் போட்டிகளுக்கான தகுதியைப் பெற முக்கியமான ஒன்றாக எழுவர் ரக்பி தொடர் போட்டிகள் அமைகின்றன. அந்த வகையில் ஐக்கிய அரபு இராச்சியத்தின் துபாய் நகரில் நடைபெறவிருக்கும் 17 வயதுக்குட்பட்ட மகளிர் அணிகளுக்கு இடையிலான ஆசிய எழுவர் ரக்பி தொடர் இளையோர் ஒலிம்பிக் போட்டிகளுக்கான தகுதிகாண் போட்டிகளாக அமைகின்றது. இத்தொடர் நவம்பர் 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

12 நாடுகள் பங்குபெறும் இத்தொடரில் வெற்றியாளராக மாறும் ஒரு நாட்டு அணி மாத்திரமே, இளையோர் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ள ஆர்ஜென்டீனாவின் புவனாஸ் அயர்ஸ் நகருக்கு பறக்கும். ஆண்கள் அணிக்கு வழங்கப்படாத சிறப்பு சலுகைகளை இலங்கை ரக்பி ஒன்றியம் ஒலிம்பிக் தகுதிகாண் போட்டிகளில் முன்னேறுவதற்காக இந்த மகளிர் அணிக்கு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்போதைய இந்த சம்பியன்ஷிப் தொடருக்கான அணியைத் தேர்வு செய்யும் பொருட்டு மேல் மாகாணம் மற்றும் ருவன்வெல்லவில் மகளிர் எழுவர் அணிகளுக்கான ரக்பி தொடர்கள் நடத்தப்பட்டிருந்தன.

இதன் மூலம் தெரிவு செய்யப்பட்ட வீராங்கனைகளுக்குத் தற்போது கொழும்பில் தேசிய மகளிர் ரக்பி அணியின் பயிற்றுவிப்பாளர் சுதத சம்பத்தால் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன்.

காணாமற்போனோர் தொடர்பான தகவல்களைப் புதிய விண்ணப்பங்களின் ஊடாக எதிவரும் டிசெம்பர் 15ஆம் திகதிக்கு முன்னர் சேகரிக்குமாறு சகல மாவட்டச் செயலர்களுக்கும் ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார். இது தொடர்பிலேயே கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

போரின் போதும் அதன் பின்னரும்கடத்தப்பட்டும்கைது செய்யப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டோர், படையினரிடம் கையளிக்கப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டோர் உள்ளிட்ட அனைத்துத் தகவல்களும் ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் முன்வைக்கப்பட்டிருந்தன.

அவ்வாறு இருக்கையில் அவசரமாக விண்ணப்பங்களை அனுப்பிக் காணாமற்போனோர் தகவல்களைச் சேகரிப்பதற்கான நோக்கம் தான் என்ன?

காணாமற்போனோரின் உறவுகளால் ஜனாதிபதி ஆணைக்குழுவிடம்முன்வைக்கப்பட்டசாட்சியங்கள்தொடர்பில் நடவடிக்கை எடுக்காத நல்லாட்சி அரசு, இவ்வாறான அவசரச்செயற்பாடுகளைமுன்னெடுத்துச் சர்வதேசத்துக்கு நாடகமாடுகின்றது - என்றார்.

## ஒற்றுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) எதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிர்க் கட்சியிலுள்ள வர்களை மட்டுமல்லாது அரச தரப்பினரது அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் களினதும் தொலைபேசி உரையாடல்களையும் ஒற்றுக் கேட்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவரது அலுவலக அதிகாரி காமினி செனரத்தை நேற்று வெலிக்கடைச்சிறைச்சாலைக்குச் சென்று சந்தித்துவிட்டு வெளியேறும்போது ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

பொலிஸார் அரசியல் பழிவாங்கலுக்கு நீதிமன்றத்தைப் பயன்படுத்திக் கொள்வதாகவும் அவர் குற்றம்சாட்டினார்.

## 10 இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மீன்பிடித்துக் கொண்டிருந்த போது இவர்கள் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டதுடன் படகும் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவர்கள்கடற்படையினரால் காங்கேசன்துறை முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் எனக் கூறப்பட்டது.

இதேவேளை, நேற்று முன்தினமும் 10 தமிழக மீனவர்கள் இலங்கைக்கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். இதுவரை 109 இந்திய மீனவர்கள் இலங்கைச்சிறைகளில்தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 14 சந்தேக..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் பிணையில் விடுவிகப்பட்டனர்.

சந்தேகநபர்கள் ஒவ்வொரு வருக்கும் 5 இலட்சம் ரூபா பெறுமதியான அரச உத்தியோகத்தர்கள் இருவர் ஆள்பிணை முறியில் கையொப்பமிட வேண்டும், 50 ஆயிரம் ரூபா பணம் வைப்பிலிட வேண்டும், ஒவ்வொரு வாரமும் திங்கள் கிழமை கிராம அலுவலர் முன்னிலையில் கையொப்பம் இட வேண்டும், எதிர்காலத்தில் எந்த விதமான குற்றச் செயல்களிலும் ஈடுபடக்கூடாது ஆகிய நிபந்தனை களை நீதிமன்று விதித்தது.

கடந்த ஓகஸ்ட் மாதம் 6ஆம் திகதி கொக்குவில் பகுதிக்கு கடமைக்காகச் சென்றிருந்த கோப்பாய் பொலிஸ் நிலையத்தைச்சேர்ந்த இரண்டுபொலிஸ் உத்தியோகத்தர்கள் மோட்டார் சைக்கிள்களில்முகத்தைமூடிய பாதுகாப்புத் தலைக்கவசங்களை அணிந்து வந்த கும்பலொன்றால் துரத்தித் துரத்தி வாள்களால்வெட்டிக்காயப்படுத்தப்பட்டிருந்தனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் 15 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுத் தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டவேளையில் சந்தேகநபர்களின்பெற்றோரை அழைத்த நீதிவான்சி.சதீஸ்தரன் இனியொரு முறை சந்தேகநபர்கள் இவ்வாறான குற்றச்செயல்களுக்கு நீதிமன்றுக்குக் கொண்டு வரப்பட்டால் நீதிமன்றின் கருணையை எதிர்பார்க்க வேண்டாம் என அவர்களுக்குக் கடுமையான அறிவுறுத்தல்களை வழங்கினார்.

அதன் பின்னரே சந்தேக நபர்களின் சட்டத்தரணிகளால் முன்வைக்கப்பட்ட பிணை விண்ணப்பம் மீது கட்டளை வழங்கினார்.

## வேட்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கூறினார்.

உள்ளூராட்சித் தேர்தல் ஜனவரி மாதம் நடைபெறவுள்ளதாக அறிவிப்புக்கள் வெளியாகியிருக்கும்நிலையில் இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்று நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மஹிந்த தேசப்பிரிய விசேட ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தினார். இதன்போதே அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

## சிங்கக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள்கூட இலங்கைத் தேசியக் கொடியை நிராகரித்த சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இப்படியான சந்தர்ப்பங்களில் ஆளுநரின் அதிகாரங்களைக் குறைத்து மாகாணத்துக்கான முழுமையான அதிகாரங்களை எவ்வாறு வழங்குவது? இப்படியான இனவாதச் சம்பவங்கள்இடம்பெறுகையில் அதனைத் தடுப்பதற்கு அதிகாரமிருக்கும்நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை எவ்வாறு இல்லாதொழிப்பது? - என்றார்.

# 16 வயதுச் சிறுமி வன்புணர்வு; இரண்டு இளைஞர்கள் கைது

வவுனியா, நவ 18

வவுனியாவில் சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்தியதாக இரு இளைஞர்கள் நேற்று முன்தினம் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா கணேசபுரம் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இந்த வன்புணர்வுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த சிறுமியை ஓட்டோவில் கடத்திச் சென்ற இரு இளைஞர்கள் அவரை வன்புணர்வுக்கு உட்படுத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:

வவுனியா கணேசபுரம் பகுதியைச் சேர்ந்த 16 வயதுடைய சிறுமிகடந்தசெவ்வாய்க்கிழமை வைத்தியசாலைக்குச் சென்றுவிட்டு தனது வீட்டுக்குத் தனியாகச்சென்றுகொண்டிருந்தார். இதன்போது ஓட்டோவில் வந்த இரு இளைஞர்கள் சிறுமியை வலுக்கட்டாயமாக ஓட்டோவில் ஏற்றிச் சென்று வன்புணர்வுக்கு உட்படுத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இதையடுத்து நேற்று முன்தினம் வவுனியா பொலிஸ் நிலையத்தில் குறித்த சிறுமியின் உறவினர்கள் இது தொடர்பாக முறைப்பாடு செய்தனர்.

இதையடுத்து நேற்று முன்தினம் அந்தச் சிறுமி அலரி விதை உண்டு உயிரை மாய்ப்பதற்கு முயன்றுள்ளார். உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிசார் அந்தப் பகுதியைச் சேர்ந்த 19, 20 வயதுகளையுடைய இரு இளைஞர்களைச் சந்தேகத்தில் கைது செய்து விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர்.

(100)

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சுரேஸ் பிறேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ். முடிவு செய்துள்ள நிலையில் ஏனைய பங்காளிக் கட்சிகளான தமிழரசுக் கட்சி, புளொட், ரெலோ ஆகியனதேர்தலுக்கான ஆசனப் பங்கீடு தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளன.

இந்நிலையில் தமிழரசுக் கட்சிக்கும் ரெலோவுக்கும் இடையிலான முதற் கட்டச் சந்திப்பு நேற்றுக் கொழும்பில் நடைபெற்றது. இதில்தமிழரசுக்கட்சியின்சார்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர்எம்.ஏ. சுமந்திரன் ஆகியோரும் -

ரெலோவின் சார்பில் அதன் உபதலைவர்களான என். ஸ்ரீகாந்தா, பிரசன்னா இந்திரகுமார், ஹென்றி மகேந்திரன், தலைமைக்குழு உறுப்பினர்களான விநோநோகராதலிங்கம், சுரேந்திரன் ஆகியோரும் பங்கேற்றனர். ரெலோவின்தலைவர் செல்வம் அடைக்கலநாதன் இந்தச் சந்திப்பில் பங்கேற்கவில்லை. அவரது மகன் நேற்றுக்காலை இந்தியாவின்திருச்சி நகரில் இடம்பெற்றவாகன விபத்தொன்றில் காயமடைந்தமையால் அடைக்கலநாதன் அவசர அவசரமாக இந்தியாவுக்குச்சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று இடம்பெற்ற சந்திப்பில் தமிழரசுக் கட்சியிடம் ரெலோ சார்பில் சில கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன.

யாழ். மாவட்டத்தில் 5 பிரதேச சபைகளின் தவிசாளர் பதவியையும், கிளிநொச்சியில் ஒரு பிரதேச சபைத தவிசாளர் பதவிகளையும், திருகோணமலையில் ஒன்றையும், மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் பதவி உட்பட மூன்றையும், அம்பாறையில் இரண்டையும்தமக்கு வழங்குமாறு ரெலோவின் சார்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

ஆசனப் பங்கீடு தொடர்பில் விரைவில்புளொட்டுடனும்பேச்சு நடத்திய பின்னர் எதிர்வரும் 22 ஆம் திகதி மூன்று கட்சிகளின் தலைவர்களும் கொழும்பில் ஒன்றுகூடி இறுதி முடிவை எட்டுவது எனத்தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

எந்தெந்தச் சபைகளின் தவிசாளர் பதவியை எந்தெந்தக் கட்சிகளுக்குவழங்குவது என்பது தொடர்பில் இந்தச் சந்திப்பில் முடிவு செய்வது என்றும் கூறப்பட்டது.

## சிங்கக் கொடியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) குளம் பரகும்பா மகாவித்தியாலயத்தில் நேற்று இந்தச் சம்பவம் நடந்தது.

அங்கு இடம்பெற்ற நிகழ்வொன்றில் பிரதம விருந்தினராகக்கலந்துக்கொண்டபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த நிகழ்வை, தேசியக் கொடி ஏற்றி ஆரம்பித்து வைக்குமாறு பாடசாலை அதிபர் மாகாணக்கல்வி அமைச்சரிடம் கேட்டுள்ளார்.

அதற்கு மறுப்புத் தெரிவித்த அமைச்சர், தேசியக் கொடியை ஏற்றுமாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ. ஜயதிலகவைக் கோரியுள்ளார்.

இதனால், அங்கு சில நிமிடங்கள்சலசலப்பு ஏற்பட்டுள்ளது. பின்னர் வடக்கு மாகாண சபை உறுப்பினர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் தேசிய மற்றும் பாடசாலைகளைக் கொடிகளை ஏற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர், மூவின மக்களும் வாழும் இலங்கையில் சிங்களமக்களைப்பெரும்பான்மையினராகப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தேசியக் கொடி அமைந்துள்ளமையாலேயேஅதனைஏற்றுவதற்கு மறுப்பு தெரிவித்தேன்.

தந்தை செல்வாவின் காலம் முதல் இலங்கையின் தேசியக் கொடியை ஏற்றுவதற்கு நாங்கள் மறுப்புத் தெரிவித்து வருகின்றோம். இதற்குப் புதிய காரணங்கள் எதுவும் இல்லை.

1950 ஆம் ஆண்டு முதல் குறித்த விடயம் தொடர்பில் நாங்கள் வலியுறுத்தி வருகின்றோம். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சியின்போதுஅரசமைப்பில் திருத்தங்களை மேற்கொள்ள முயற்சிக்கப்பட்டது. அதன் போதும் நாங்கள் இந்த விடயத்தை எடுத்துரைத்தோம். ஆனால் அனைத்து அதிகாரிகளும் பாராமுகமாகவே செயற்பட்டனர். புதிதாக மேற்கொள்ளப்படவுள்ள அரசமைப்பிலும் இந்தவிடயம்கவனத்தில்கொள்ளப்படவில்லை.

தேசியக் கொடி மூவின மக்களையும் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் அமையும்போதே அதனை ஏற்றுவதற்கு இணக்கம் தெரிவிக்கப் படும் - என்றார்.

## பியர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மதுவுக்கு எதிரான இளைஞர் அணியின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் யாழ்ப்பாணத்திலுள்ள வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாக இடம்பெற்றது

போதையற்ற நாட்டை உருவாக்குவதாக ஜனாதிபதி தெரிவித்துவருகின்ற நிலையில் போதைப்பானமான பியரின் விலையை அரசு குறைத்திருப்பதென்பதை ஏற்றுக் கொள்ள முடியாதென்று இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டவர்கள் வலியுறுத்தினர்.

மேலும் யாழ். குடாநாட்டில் இடம்பெற்றுவரும் பல்வேறு வன்முறைச்சம்பவங்களுக்கும் போதைப்பொருள்பாவனையே காரணமாக உள்ளது. இந்த நிலையில் இந்த விலைகுறைப்பானது குற்றச்சம்பவங்களை அதிகரிக்க வழிவகுக்கும் எனவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

எனவே ஜனாதிபதி இந்த விடயத்தில் தலையிட்டு பியருக்கான விலையை மீண்டும் அதிகரித்து அவர் வழங்கிய போதையற்றநாடுஎனும்வாக்குறிதியை முழுமையாக நடைமுறைப் படுத்தவேண்டும் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

இந்தப் போராட்டத்தில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்சுகிர்தன்உட்படஇளைஞர், யுவதிகள், பொதுமக்கள் எனப் பலர் பங்கேற்றனர். (107)

## சிறைக்காவலர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அழைத் துச் சென்றிருந்தனர்.

அங்கு சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் பிடியிலிருந்து தப்பிய விக்டர் நிசா, மல்லாகம் நீதிமன்றத்தின் மதில் பாய்ந்து தப்பி ஓடினார்.

நீதிமன்ற மதிலுக்கு வெளிப்புறமாக மோட்டார் சைக்கிளில் காத்திருந்த ஒருவர் விக்டர் நிசாவைஏற்றிச்சென்றார்எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் சிறைச்சாலை உத்தியோகத்தர்களும் பொலிஸாரும் முன்னெடுத்த தேடுதலை அடுத்து மல்லாகம் பகுதியிலுள்ள வீடொன்றில் வைத்து விக்டர் நிசா மீண்டும் கைது செய்யப்பட்டார்.

இதேவேளை, கோப்பாய் பொலிஸாரை வெட்டிய வழக்கில் விக்டர் நிசா உள்ளிட்ட 14 பேருக்குயாழ்ப்பாணம்நீதிவான் மன்றுநேற்றுபிணை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(107)

# வடமராட்சியில் சட்டவிரோத மீன்பிடியால் பாரம்பரிய தொழில்கள் பெரிதும் பாதிப்பு



## நாடாளுமன்றில் டக்ளஸ் எம்.பி.

யாழ்ப்பாணம், வடமராட்சி பகுதி கடற் பரப்பில் தொடர்ந்தும் சட்டவிரோத கடற்றொழில்கள் இடம்பெற்று வருகின்றன எனவும், இதன் காரணமாக பாரம்பரிய தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வரும் சுமார் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன எனவும் அந்தக் கடற்தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அங்கு நடைபெறும் சட்டவிரோத செயற்பாடுகளை தடுத்துநிறுத்த விரைவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, அமைச்சர்மஹிந்தஅமரவீரவிடம் கேட்டுக்கொண்டார்.

நாடாளுமன்றத்தில் கடற்றொழில், நீரியல் வளத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் வடமராட்சி கடற்பகுதியில் இடம்பெறும் சட்டவிரோத மீன்பிடிகள் தொடர்பில் கேள்விகளை முன்வைத்து உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

வடமராட்சி கடற்பகுதியில் கணவாய் மீன் பிடிப்பதற்காக குழை வலைகள் பயன்படுத்தி சிலர் சட்டவிரோதமான கடற்தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும், இதன் காரணமாக பாரம்பரிய முறையிலான கடற் தொழிலாளர்களது தொழிற்துறைகள் பாதிக்கப்படும் அதே சமயம் அவர்களது தொழில் உபகரணங்கள் அழிவடைந்து வருகின்றன. கடல் வளங்களும் அழிக்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவித்து, பாதிக் கப்பட்டுள்ள அப் பகுதி சார்ந்த 12 கடற்றொழிலாளர்கள் சங் கங்கள் கையொப்பமிட்டு எழுத்து மூல முறைப்பாட்டை முன்வைத்துள்ளன.

வடக்கு கடற் பரப்பில் சட்டவிரோத கடற்றொழில்கள் இடம்பெற்றுவருகின்றமைதொடர்பில் நான் ஏற்கனவே தங்களது அவதானத்துக்குக் கொண்டு வந்துள்ள நிலையில், தாங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, அத்தகைய சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் ஒரு சில பகுதிகளில் சில காலங்களுக்கு நிறுத்தப்பட்டு, பின்னர் மீண்டும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன எனத் தெரிய வருகின்றது.

மேற்படி சட்டவிரோத கடற்றொழில் முறைமையை உடன் நிறுத்துவதற்கும், அத்தகைய தொழில் முயற்சிகளில் ஈடுபடுவோருக்கு மாற்றுத் தொழில் குறித்த ஈடுபாடுகளை ஏற்படுத்தி, அதற்கான வசதிகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்க முடியுமா?

சில பகுதிகளில் தடை காரணமாக குறிப்பிட்ட சில காலத்திற்கு நிறுத்தப்படுகின்ற சட்டவிரோதமான கடற்றொழில் முயற்சிகள், பின்னர் மீண்டும் ஆரம்பிக்கப்படுகின்ற நிலைமைகள் காணப்படுகின்ற நிலையில், மேற்படி தடையை மேலும் இறுக்கமாகநடைமுறைப்படுத்த எடுக்கப்படக் கூடிய நடவடிக்கைகள் எவை? என்பது தொடர்பாக விளக்கமளிப்பதுடன், உரிய நடவடிக்கைகளையும் விரைவாக எடுத்து எமது கடல்வளத்தைப் பாதுகாக்க வேண்டும் என்றும் மேற்படி மீன்பிடி தொழிற்சங்கங்கள் சார்பில் கேட்டுக்கொள்கின்றேன் என்றும் அவர் தெரிவித்தார்.

(இ

# தென்கொரிய பாதுகாப்பு அதிகாரி இராணுவத் தளபதியைச் சந்தித்தார்



கொழும்பு, நவ. 18

இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க, தென் கொரியா குடியரசின் பாதுகாப்பு இணைப்பு அதிகாரி கேணல் இன்லீயை சந்தித்தார்.

இராணுவ தலைமையகத்தில் உத்தியோக பூர்வமாக இடம்பெற்ற இந்த சந்திப்பின் போது இரு நாடுகளுக்கும் இடையிலான முக்கிய விடயங்கள் மற்றும் பாதுகாப்பு தொடர்பாகக்கலந்துரையாடப்பட்டன.

இந்த நிகழ்வை நினைவுகூரும் வகையில் இருவருக்கும் இடையில் நினைவுச் சின்னங்களும் பரிமாறப்பட்டன.

# நாமல் எவ்வாறு சட்டத்தரணி ஆனார்?

## அமைச்சர் சுஜீவ சேனசிங்க கேள்வி எழுப்புகிறார்



கொழும்பு, நவ. 18

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ எவ்வாறு சட்டத்தரணியானார் என சர்வதேச வர்த்தக ராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாமல் ராஜபக்ஷ நேர்மையான முறையில் சட்டக்கல்லூரி பரீட்சையில் சித்தியடையவில்லை. குளிரூட்டப்பட்ட அறை ஒன்றில் இருந்து நாமல் ராஜபக்ஷ சொகுசாக பரீட்சைக்குத் தோற்றியுள்ளார். அவரது பரீட்சையில் பல்வேறு மோசடிகள் இடம்பெற்றுள்ளன.

சட்டத்தரணி என்றபோதிலும் எந்தவொரு சட்டமும் நாமல் ராஜபக்ஷவிற்குத் தெரியாது.

சிவில் வழக்கு சரத்துக்களில் ஏதேனும் இரண்டு சரத்துக்களை முடிந்தால் நாமல் ராஜபக்ஷ தற்போது நாடாளுமன்றில் கூறட்டும்.

கிறிஸ் நிறுவனத்தின் ஊடாக நாமல் 40 கேடி ரூபா கொள்ளையிட்டுள்ளார். சித்தப்பமார், மாமார், தந்தை மற்றும் சகோதரர்களுடன் இணைந்து பெரியளவில் பணத்தை கொள்ளையிட்டுள்ளனர்.

இவ்வாறு வெட்கம் கெட்ட பிழைப்பு நடத்துவதற்குப் பதிலாக, தோளில் போட்டிருக்கும் சிவப்பு துண்டைக் கொண்டு தூக்கிட்டு சாவது மேல்.

ஒன்றாகவிளையாடிய வசீம் தாஜூடீனையும் கொலை செய்துள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பேர்பச்சுவல் ட்ரஸரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜூன் அலோசியஸூடன் சுஜீவ சேனசிங்க தொடர்பு பேணினார் எனவும் இருவரும் 44 தடவைகள் தொலைபேசியில் உரையாடியுள்ளனார் எனவும் நாமல் ராஜபக்ஷ குற்றஞ் சுமத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(க)

# யாழ்ப்பாணத்தின் முக்கிய இடங்களில் பொலிஸார் சோதனை நடவடிக்கை!



யாழ்ப்பாணம், நவ. 18

யாழ்ப்பாணத்தின் முக்கிய இடங்களில் பொலிஸார் சோதனை மற்றும் ரோந்து நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் கடந்த சில நாள்களுக்கு முன் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவங்களை அடுத்து நேற்றுமுன்தினம் யாழ்ப்பாண பொலிஸாரால், யாழ் நகரின் முக்கிய இடங்களில் சோதனை நடவடிக்கைகள் மற்றும் ரோந்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

குறிப்பாக சந்தேகத்திற்கு இடமாக பயணித்த வாகனங்கள், மோட்டார்சைக்கிள்கள் பொலிஸாரால் சோதனையிடப்பட்டன.

அத்தோடு வீதிகள், சந்திகளில் ஒன்றுகூடி நின்ற இளைஞர்கள் பொலிஸாரால் எச்சரிக்கப்பட்டு, வீடுகளுக்கு செல்லுமாறு பணிக்கப்பட்டுள்ளனர்.

சட்டம் ஒழுங்குக்கு சவால் விடும் அளவுக்கு அதிகரித்துள்ள வாள்வெட்டு சம்பவங்களைக் கட்டுப்படுத்துமாறும், அதன் சூத்திரதாரிகளை விரைந்து கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துமாறும் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபருக்கு அவசர பணிப்புரை பிறப்பித்துள்ள நிலையில், இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் கடமையாற்றும் ஒரு தொகுதி பொலிஸார் இந்த விசேட நடவடிக்கைக்கு பயன்படுத்தப்பட்டுள்ளனர் என்று யாழ்.மாவட்ட பொலிஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த விசேட நடவடிக்கை தொடர்ச்சியாக இடம்பெறும் எனவும், வீதிகளில் முக்கிய இடங்களில் இளைஞர்கள் அநாவசியமான முறையில் ஒன்றுகூடுகின்றமையை தவிர்க்குமாறும் கேட்டுக்கொண்ட அந்த பொலிஸ் உயரதிகாரி, தவறும் பட்சத்தில் அவர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

# பொலிஸ் காவலிலிருக்கும் நபரை அணுகச் சட்டத்தரணிக்கு உரிமை

## குற்றவியல் நடைமுறை சட்டக்கோவையில் திருத்தம் கொண்டுவருகிறது நீதி அமைச்சு

கொழும்பு, நவ 18

பொலிஸ் தடுப்பிலுள்ள சந்தேகநபரொருவரை அவரது சட்டத்தரணி அணுகுவதற்கும் அவரைத் தடுத்துவைத்துள்ள பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியைச் சந்தித்து சட்டத்தரணி தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும் அதிகாரமளிக்கும் சட்டத்திருத்தத்தை அரசு கொண்டுவருகிறது.

குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவையில் இதனைச் சிறப்பு ஏற்பாடாகக் கொண்டுவருவதற்கான சட்டவரைவை நீதி அமைச்சர் வர்த்தமானியில் வெளியிட்டுள்ளார்.

பொலிஸாரால் கைது செய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டுள்ள சந்தேகநபரை அவரது சட்டத்தரணி அணுகுவதற்குள்ள உரிமையை உறுதிப்படுத்துவதாக இந்தத் திருத்தம் அமையும்.

சந்தேகநபர் தடுப்புக்காவலுக்குக் கொண்டு செல்லப்படும் நேரத்திலிருந்து அவரைத் தடுத்துவைத்துள்ள பொலிஸ் நிலையத்தை அணுகச் சந்தேகநபரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்தரணிக்கு உரிமை உண்டு.

எனினும் சந்தேகநபரிடம் முன்னெடுக்கப்படும் புலன் விசாரணையை சட்டத்தரணியின் முறையீடு பாதிக்கக்கூடாது.

சந்தேகநபரைச் சந்திக்கவரும் சட்டத்தரணியை, பொலிஸ் அலுவலர்கள் உளப்பூர்வமாகவும் நயமாகவும் நடத்துவதுடன், நியாயமானதும்பொறுமையானதுமான விளக்கத்துக்கு அவருக்கு இடமளிக்கவேண்டும்.

சந்தேகநபரைத் தடுத்துவைத்துள்ள பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியைச் சந்திப்பதற்கும் அவரிடம் பின்வரும் தகவல்களைப் பெறுவதற்கும் சந்தேகநபரின் சட்டத்தரணிக்கு உரிமை உண்டு.

★ சந்தேகநபரால்புரியப்பட்டதவறு.

★சந்தேகநபர் கைது செய்யப்பட்ட இடம், நேரம், திகதி.

★ சந்தேகநபரை நீதிவான் முன்னிலையில் முற்படுத்திய திகதியும் அண்ணளவான நேரமும்

★ புலன் விசாரணைகளைப் பாதிக்காத நீதிநலன்களுக்குப் பாதகமான நிலையை உருவாக்காத வேறெவையேனும் தகவல்களைப் பெறல்.

சட்டத்தரணிக்கு உள்ள உரித்துக்கள்:

★சந்தேகநபர் தடுத்துவைக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியைச் சந்தித்துச் சந்தேகநபர் சார்பிலான முறையீட்டை வழங்கல்.

★ 1997ஆம் ஆண்டு 30ஆம் இலக்கப் பிணைச் சட்டத்தின் 6ஆம் பிரிவுக்கு அமைவாக சந்தேகநபருக்குப் பிணையளிப்பதற்காக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் விண்ணப்பம் வழங்கல்

★ஆயுதங்கள், ஆபத்தானபொருள்களை அடையாளம் காண்பதற்காக சந்தேகநபர் வேறு இடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தால் அல்லது பிடியாணையின்றிக்கைதானசந்தேகநபரிடம் விசாரணை இடம்பெறும்போது சட்டத்தரணி அணுகுவது தாமதமாகலாம்.

★எனினும் சட்டத்தின் ஏற்பாட்டால் பொலிஸில் தடுப்பிலுள்ள சந்தேகநபர் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தவேண்டும் என்ற நேரம் முடிவுறுவதற்குள் சந்தேகநபரை அணுகச் சட்டத்தரணிக்கு அனுமதியளித்தல் வேண்டும்.

★சந்தேகநபரை அவரது சட்டத்தரணி அணுகுவதைத் தாமதிக்கும் முடிவைப் பொலிஸ் கண்காணிப்பாளர் பதவிக்குக் குறையாத பொலிஸ் அலுவலரே எடுக்க முடியும். அதனைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியே நடைமுறைப்படுத்த முடியும்.

★ சந்தேகநபரிடம் விசாரணை இடம்பெறும்போதும் வாக்குமூலம் பெறப்படும்போதும் சட்டத்தரணி சமுகமளிக்க முடியாது.

## கோட்டாவின் மனு நிராகரிப்பு



கொழும்பு, நவ 18

அவன்காட் வழக்கின் அனைத்துக் குற்றச்சாட்டுக்களில் இருந்தும் தன்னை விடுவிக்குமாறு கோரி முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ தாக்கல் செய்திருந்த மனுவைக் கொழும்பு நீதிவான் நீதிமன்று நிராகரித்துள்ளது.

இந்த வழக்குக் குறித்த விசாரணைகள் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றபோதே மனு நிராகரிக்கப்பட்டது.

அவன்காட் நிறுவனத்துக்கு அனுமதியளித்ததன் மூலம் மிதக்கும் ஆயுதக் களஞ்சியத்தைச் செயற்படுவதற்கு இடமளித்தமை தொடர்பாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட 6 பிரதிவாதிகளுக்கு எதிராக லஞ்சஊழல் ஆணைக்குழுவினால் மேற்படி வழக்குத் தொடரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 'புதியதொரு வீடு' நாடகம் மீண்டும் மேடையேற்றம்

யாழ்ப்பாணம், நவ 18

திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் மஹாகவியின் புதியதொரு வீடு நாடகம் இன்று சனிக்கிழமை இரண்டு காட்சிகளாக முற்பகல் 10.30 மணிக்கும் மாலை 4.00 மணிக்கும் இலக்கம் 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின், கலைத்தூதுக் கலையகத்தில் மேடையேற்றப்படவுள்ளது.

1969 ஆம் ஆண்டு மஹாகவியினால் எழுதப்பட்ட மேற்படி நாடகம் முதன் முதலாக அ. தார்சீசியசினால் 1971 ஆம் ஆண்டு கொழும்பில் மேடையேற்றப்பட்டது. அதன்பின் பல தடவைகள் பல நெறியாளர்களினால் தயாரிக்கப்பட்டு மேடையேற்றப்பட்டு வந்துள்ளது. திருமறைக் கலாமன்றத்தினாலும் பல தடவைகள் தயாரிக்கப்பட்டு மேடையேற்றப்பட்ட இந்த நாடகம் இறுதியாக கடந்த பெப்ரவரி மாதம் 05ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் மேடையேற்றப்பட்டது. தற்போது மீண்டும் மேடையேற்றப்படுகின்றது.

மஹாகவியின் கவிதை நாடகமாகிய இந்த நாடகம் மீனவக் கிராமமொன்றின் கதை மாந்தரினையும் கடலோடு தொடர்புடையதாக அவர்கள் எதிர்கொள்ளும் வாழ்வின் சவால்களையும் வெளிப்படுத்துகின்றது. இந்த நாடகம் ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் நாடகமும் அரங்கியலும் பயிலும் மாணவர்களுக்கான புதிய பாடத்திட்டத்தில் பாடநூலாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தவறான முடிவெடுத்து கொக்குவில் மாணவன் சாவு



தவறான முடிவெடுத்து நேற்று முன் தினம் தனது உயிரை மாய்த்துக்கொண்டார் கொக்குவில் பகுதி மாணவன் ஒருவர்.

அவர் தனக்கு விருப்பமான 'பஷன் டிசைன்' கற்கை நெறி தொடர 30 இலட்சம்ரூபா பணம் கேட்டதாகம் அதனை வழங்க வீட்டார் மறுப்புத் தெரிவித்ததாகவும், இதனால் ஆத்திரமடைந்த மாணவன் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்தார் எனவும் கூறப்பட்டது.

கொக்குவில் பகுதியைச் சேர்ந்த சண்முகரத்தினம் டார்வின் (வயது-19) என்ற மாணவனே இவ்வாறு உயிரை மாய்த்துள்ளார்.

இவர் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் உயர் தரத்தில் கல்வி கற்று வந்துள்ளார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டுப் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## நாமலுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, நவ 18

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட ஐவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

கவர்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர்களான நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மற்றும் 4 பேர் இணைந்து, கவர்ஸ் கோப்ஸ் நிறுவனத்தில், 15 மில்லியன் ரூபா மோசடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் பேரில், ஐவருக்கும் எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வீடுடைத்து திருடிய குற்றச்சாட்டில் பருத்தித்துறையில் இருவர் கைது

யாழ்ப்பாணம், நவ 18

வடமராட்சி, பருத்தித்துறை – மாதனைப் பகுதியில் வீடு ஒன்றை உடைத்துத் திருட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இருவர் பருத்தித்துறைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வீட்டு உரிமையாளரின் குடும்பம் வெளிநாடு சென்றிருந்தவேளை இடம்பெற்ற இந்தத் திருட்டில் தொலைக்காட்சி, புகைப்படக் கருவி இரண்டு மற்றும் ஐந்து பவுண் சங்கிலி என்பன களவாடப்பட்டிருந்தன.

கைபேசிகள் திருட்டுடன் தொடர்புடையவர்கள் என கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்ட இருவரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் இந்தத் திருட்டுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் கற்கோவளம் பகுதியைச்சேர்ந்த 21,22 வயதுடைய இளைஞர்கள் இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். திருடப்பட்ட பொருள்களையும் மீட்டுள்ளதாகப் பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களிடமிருந்து இரண்டு தொலைக்காட்சிப் பெட்டிகள் , ஐந்து டீ.வி.டி பிளேயர் மற்றும் ஐந்து பவுண் சங்கிலி என்பன மீட்கப்பட்டுள்ளன.

இருவரும் விசாரணைகளின் பின்னர் இன்று பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்றும் பொலிஸார் கூறினர்.

## குமுதினி, வடதாரகை படகுச்சேவை வழமைக்கு



யாழ்ப்பாணம், நவ 18

குறிகாட்டுவான் – நெடுந்தீவு இடையேயான கடல் போக்குவரத்தில் ஈடுபடும் குமுதினி மற்றும் வடதாரகை படகுகளின் சேவைகள் இன்று சனிக்கிழமை தொடக்கம் வழமை போல் இடம்பெறும் என நெடுந்தீவுப் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

## ஜாலியவுக்குப் பிடியாணை



கொழும்பு, நவ 18

அமெரிக்காவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்ரமசூரியவுக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்ற நீதிபதியினால் இந்தப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கத் தூதுவராகக் கடமையாற்றிய காலத்தில் காரியாலயத்துக்குக் கட்டடம் வாங்குவது தொடர்பில் பணத்தைத் தவறான முறையில் கையாண்டார் எனக் குற்றம் சுமத்தப்பட்டு அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தால் முன்னர் அவருக்குப் பிணை வழங்கப்பட்டது. மருத்துவத் தேவைக்காக வெளிநாடு செல்வதற்கான அனுமதி நிபந்தனைகளுடன் நீதிமன்றால் வழங்கப்பட்டிருந்து.

ஆயினும் உரிய தினத்தில் மீண்டும் அவர் நீதிமன்றத்தில் முன்னிலையாகாத காரணத்தால் அவருக்கு எதிராக நேற்றுப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.11.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.